# நம்பிக்கை இழக்காதே



ஆசீஸ் ராய்ச்சூர்

**இலவச விநியோகத்திற்கு மட்டுமே**

இந்தியாவின் பெங்களூரு, ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்ட் அவுட்ரீச் தயாரித்து விநியோகித்தது.
முதல் பதிப்பு அச்சிடப்பட்டது: நவம்பர் 2018 திருத்தப்பட்ட பதிப்பு: ஆகஸ்ட் 2020
தமிழில் மொழியாக்கம்: அக்டோபர் 2020

**தொடர்பு தகவல்:**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: **apcwo.org**

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத மேற்கோள்களும் புனித பைபிளான புதிய கிங் ஜேம்ஸ் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமை © 1982 தாமஸ் நெல்சன், இன்க்., அனுமதியால் பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

விவிலிய வரையறைகள், ஹீப்ரு மற்றும் கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள் பின்வரும் ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றன:

Thayer's Greek Definitions. Published in 1886, 1889; public domain.
Strong's Hebrew and Greek Dictionaries, Strong's Exhaustive Concordance by James Strong, S.T.D., LL.D. Published in 1890; public domain.
Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words, © 1984, 1996, Thomas Nelson, Inc., Nashville, TN.

**நிதி பங்குதாரர்**
அனைத்து மக்கள் தேவாலயத்தின் உறுப்பினர்கள், கூட்டாளர்கள் மற்றும் நண்பர்களின் நிதி உதவி மூலம் இந்த வெளியீட்டின் உற்பத்தி மற்றும் விநியோகம் சாத்தியமானது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் வளப்படுத்தப்பட்டிருந்தால், அனைத்து மக்கள் தேவாலயத்திலிருந்தும் இலவச வெளியீடுகளை தயாரித்து விநியோகிக்க உதவ நிதி ரீதியாக பங்களிக்க உங்களை அழைக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give ஐப் பார்வையிடவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு செய்வது என்பது குறித்து இந்த புத்தகத்தின் பின்புறத்தில் உள்ள “அனைத்து மக்கள் தேவாலயத்துடனான கூட்டாளர்” பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**அஞ்சல் பட்டியலில்**
அனைத்து மக்கள் தேவாலயத்திலிருந்தும் இலவச வெளியீடுகள் வெளியிடப்படும்போது அறிவிக்க, நீங்கள் apcwo.org இல் எங்கள் அஞ்சல் பட்டியலுக்கு குழுசேரலாம்.

# உள்ளடக்கம்

1. **வாழ்க்கை எப்பொழுதுமே எளிதானதல்ல** ........ 1
2. **நம்பிக்கை–கிறிஸ்தவ வாழ்வின் மிகமுக்கிய அம்சம்** ........ 3
3. **நம்பிக்கையின் அவசியம்** ........ 6
4. **நம்பிக்கையற்ற சூழ்நிலையை தலைகீழாக மாற்றும் கடவுள்** ........ 9
5. **நம்பிக்கை அற்ற சூழ்நிலையில் நம்பிக்கை வைக்கத் தேவையானவைகள்** ........ 14
6. **நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நான் என்ன செய்வது?** ........ 21

# 1. வாழ்க்கை எப்பொழுதுமே எளிதானதல்ல

நாம் அனைவருமே பல கனவுகளோடும், திட்டங்களோடும், ஆசைகளோடும், எதிர்பார்ப்புகளோடும் நம் வாழ்க்கை என்னும் பயணத்தைத் துவக்குகிறோம். உற்சாகத்தோடு நம் எதிர்காலத்தைத் திட்டமிடுகிறோம். நாம் எதிர்காலத்தில் எப்படியிருக்கவேண்டும், எங்கெங்கே போகவேண்டும், என்னென்ன செய்யவேண்டும் என்று மிகவும் உற்சாகமாகத் திட்டமிடுகிறோம். ஆனால், நம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் எதிர்பாராவிதத்தில் ஏதோ சில காலகட்டங்களில் பெரும் புயல்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. வாழ்க்கை எப்பொழுதுமே இலகுவாக இருப்பதில்லை. சில கதைகளில் வருவதுபோல வாழ்க்கை இலகுவாக இருக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் அது அப்படி இருப்பதில்லை. எதிர்பாராத சவால்களையும், சங்கடங்களையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. அந்த நேரங்களில் நாம் போட்ட திட்டங்கள், கனவுகள் தகர்ந்துபோகிறது. அப்பொழுது நம்பிக்கையில்லாத சூழநிலைக்குள் சிக்கிக்கொண்டதாக உணர்கிறோம். நம்பிக்கை இழந்து போகிறோம். “என் திட்டங்கள் ஒருபோதும் நடைபெறப்போவதில்லை என்று சொல்லி, போட்ட திட்டங்களைக் கைவிட்டு விடுகிறோம். நம் எதிர்பார்ப்புகள் நிறைவேறப்போவதில்லை என்ற தீர்மானத்திற்கு வருகிறோம்.

சிலவேளைகளில், நம் வாழ்வில் நாம் எதிர்பாராத திருப்பங்களையும் சூழ்நிலைகளையும் சந்திக்க நேரிடுகிறது. அதை எதிர்கொள்ள நாம் முற்றிலும் தயாராகாத சூழ்நிலையில் இருப்போம். எல்லா பக்கங்களிலும் கதவுகள் அடைக்கப்பட்டது போலவும், எந்த திசையில் செல்வது என்று குழம்பி நிற்பது போன்ற சூழ்நிலையை அடைகிறோம். இந்த புத்தகத்தை வாசிக்கிற நீங்களும் ஒருவேளை அதுபோன்ற சூழ்நிலையில் இருக்கலாம். அது ஒருவேளை நீங்கள் செய்கிற வேலையாகவோ, தொழிலாகவோ, படிப்பாகவோ, குடும்ப சூழ்நிலையாகவோ, திருமண வாழ்வாகவோ இருக்கலாம். ஏனெனில், வாழ்வில் எந்த சந்தர்ப்பத்தில் அப்படிபட்டவைகள் நேரிடும் எனக் கூற இயலாது. ஆனால், அவ்வாறான மரித்த, நம்பிக்கையற்ற சூழ்நிலையை மாற்ற வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள கடவுள் இருக்கிறார். அவர் நம்பிக்கையற்ற

சூழ்நிலையை தலைகீழாக மாற்றும் சக்தியுள்ளவர். அவர் உங்கள் அருகில் இருப்பதை நீங்கள் உணர்ந்தால், நம்பிக்கையற்ற சூழ்நிலைகளில் நம்பிக்கை பிறக்கும். நீங்கள் வெற்றிபெற்றவர்களாக வலம் வருவீர்கள். உங்கள் நம்பிக்கையை இழந்துபோகாதிருக்க இந்த புத்தகம் எளியமுறையில் உங்களை உற்சாகப்படுத்தும்.

## நம்பிக்கை மிகவும் அவசியமானது

நம்பிக்கை என்பது மிகவும் அவசியமானது. நம்பிக்கை என்பது நாம் குறிப்பிட்ட ஒன்றை கனவுகண்டு, அதை ஆசையோடு எதிர்பார்த்து காத்திருப்பதாகும். கிறிஸ்தவ வாழ்வின் மிகமுக்கியமான அம்சம் என்பது இந்த எதிர்பார்ப்பாகும். கிறிஸ்தவ வாழ்வின் மிகமுக்கிய அம்சங்களாக மூன்றை வேதாகமம் வலியிறுத்துகிறது.

**1 கொரிந்தியர் 13:13**
**இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.**

**ஆகவேதான், இப்பொழுது நமக்கு நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அன்பு என்ற மூன்றும் அவசியமாக இருக்கிறது; ஆனால், இவை மூன்றிலும் பிரதானமானது அன்பாகும். (எளிய தமிழில்)**

**மரித்த, நம்பிக்கையற்ற சூழ்நிலையை மாற்றவே வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள கடவுள் இருக்கிறார். நம்பிக்கையற்ற சூழ்நிலையை நீங்கள் எதிர்பார்ப்போடு இருக்கும் சூழ்நிலையாக மாற்ற அவர் சக்தியுள்ளவர். அவர் உங்கள் சூழ்நிலையை மாற்றுவாராக!**

## 2. நம்பிக்கை–கிறிஸ்தவ வாழ்வின் மிகமுக்கிய அம்சம்

இயேசுவை நம்பி வாழ்கிறவர்களாகிய நாம் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலகாரியங்களை எதிர்பார்த்து வாழ்கிறோம்.

## நித்திய உயிர் குறித்த எதிர்பார்ப்பு

**தீத்து 1:3**
**பொய்யுரையாத தேவன் ஆதிகாலமுதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம்பண்ணி, அதைக்குறித்த நம்பிக்கையைப்பற்றி…**

**ஏனெனில், அவர் இந்த உலகத்தைப் படைப்பதற்கு முன்பாகவே, "நான் உங்களுக்கு சாவே இல்லாத ஒரு வாழ்வைத் தருவேன்" என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். கடவுள் சொன்ன சொல் மாறாதவராகும். (எளிய தமிழில்)**

நித்திய உயிர் நமக்குக் கிடைப்பது குறித்த எதிர்பார்ப்பு நமக்கு இருக்கிறது. அந்த நித்திய உயிர், நம் ஆவியில் நமக்குள் இருந்தபோதிலும், அந்த உயிரோடு புதிய உடலில் வாழப்போவது குறித்த எதிர்பார்ப்பு நமக்கு இருக்கிறது.

## மகிமையான வாழ்வு குறித்த எதிர்பார்ப்பு

**கொலோசெயர் 1:27**
**புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.**

**எப்படியெனில், இயேசு கிறிஸ்து மூலம் கடவுளோடு நட்புறவுகொண்டு பழகுகிற உயர்ந்த சிலாக்கியம் யூதர்களுக்கு மாத்திரம் அல்ல, இந்த உலகில் வாழும் அனைத்து சமுதாய மக்களுக்கும் கிடைக்கும் என்னும் செய்தியை இந்தக் காலத்தில் அவரை நம்பி வாழ்கிற மக்கள் அனைவருக்கும் வெளிப்படுத்த அவர் விரும்பினார். அதாவது, சுத்தமான ஆவியானவர் மூலம், இயேசு உங்களுக்குள்ளும், இந்த உலகில் உள்ள அனைத்து சமுதாய மக்களுக்குள்ளும் வாசம் செய்கிறார் என்பது தான் அந்த இரகசியம். அதன் விளைவாகவே, கடவுளுடைய .சிறப்பான வாழ்வில், மற்ற**

**சமுதாயத்தாராகிய உங்களுக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உங்களுக்கு இருக்கிறது. (எளிய தமிழில்)**

நமக்கு ஒரு மகிமையான வாழ்வைத் தருபவர் இயேசு கிறிஸ்து மட்டுமே என்ற எதிர்பார்ப்பில் நாம் வாழ்கிறோம். நாம் இப்பொழுது வாழும் இந்த உலகைவிட சிறப்பானதொரு புதிய உலகில் நாம் வாழப்போகிறோம் என்ற எதிர்பார்ப்பைத் தருபவரும் அவர்தான். அந்த உலகில் கடவுளுடைய பிரசன்னத்தோடு, அவரோடு சேர்ந்து நாம் வாழப்போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் வாழ்கிறோம்.

## அழிவிலிருந்து காப்பாற்றப்படுதல் குறித்த எதிர்பார்ப்பு

**1 பேதுரு 1:7-9**
**7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.**
**8 அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,**
**9 உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்.**

**7 எப்படியெனில், அழிந்துபோகிற தங்கத்தையே, அது எவ்வளவு சுத்தமானது என பரிசோதித்துப் பார்க்க அதை நெருப்பில் போடுகிறார்கள். ஆனால், அழியாத சொத்தைப் பெற நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கை எவ்வளவு உண்மையானது? என்று சோதித்துப் பார்க்க பரிசோதனைகள் அவசியமல்லவா? அந்தப் பரிசோதனைகளையெல்லாம் நீங்கள் ஜெயித்த பின்புதான் நீங்கள் வைத்துள்ள உங்கள் உண்மை நம்பிக்கையின் அடிப்படையில் இயேசுகிறிஸ்துவை நீங்கள் பார்க்கும்பொழுது, அதற்குரிய பெயர், புகழ், மதிப்பு அனைத்தும் உங்களுக்குக் கிடைக்கும்.**
**8 ஏனெனில், இயேசுகிறிஸ்துவை நீங்கள் இதுவரை பார்க்காதிருந்தும் அவரை நீங்கள் நேசிக்கிறீர்கள். இதுவரை பார்க்காத அவரை நம்பியல்லவா இப்பொழுது சந்தோசப்படுகிறீர்கள். அவர்மீது உங்களுக்குள்ள நம்பிக்கையினால் உண்டான உங்கள் சந்தோசத்தையும், அவரை நீங்கள் மகிமைப்படுத்தி வாழ்வதையும் யாரால் விவரிக்க இயலும்?**
**9 அப்படியாக நீங்கள் அவரை நம்பி வாழ்வதற்குப் பலனாகத்தான், உங்கள் வாழ்வு காப்பாற்றப்படுகிறது. (எளிய தமிழில்)**

நம் வாழ்வு காப்பாற்றப்படுவது இங்கே துவங்கினாலும், அதில் ஒரு பங்கு நிறைவடைவதற்காக நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

## கிறிஸ்துவின் வருகை குறித்த எதிர்பார்ப்பு

**தீத்து 2:13**
**நாம் நம்பியிருக்கிற ஆனந்தபாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.**

**எல்லா சக்தியும் படைத்தை கடவுளும் நம் வாழ்வைக் காப்பாற்றி வழி நடத்துகிறவருமான இயேசு கிறிஸ்து வரும் ஆச்சரியமான, சந்தோசமான நாளுக்காக நாம் எப்படிக் காத்திருக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொடுக்கிறார். (எளிய தமிழில்)**

## உயிரோடு எழுதல் குறித்த எதிர்பார்ப்பு

**1 தெசலோனிகேயர் 5:8**
**பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.**

**ஆனால், நமோ பகலில் வெளிச்சத்தில் வாழ்வதுபோல, அவ்வாறான கெட்ட ஆசை விருப்பங்களைக் கட்டுப்படுத்தி வாழ்கிறோம். மேலும், படைவீர்கள் மார்பில் கவசம்போட்டு, தங்கள் உயிரைக் காப்பதுபோல, கடவுள் மீது நமக்குள்ள நம்பிக்கையையும், மற்றவர்கள் மீது நமக்குள்ள அன்பையும் பாதுகாக்க வேண்டும். படைவீரர்கள் தலையில் கவசம் அணிந்து, தங்கள் தலையைக் காப்பதுபோல, கடவுள் நம்மை நிச்சயம் காப்பாற்றுவார் என்ற எதிர்பார்ப்போடும் வாழவேண்டும். (எளிய தமிழில்)**

# 3. நம்பிக்கையின் அவசியம்

நம்முடைய அனுதின வாழ்க்கையில் நம்பிக்கை மிகவும் அவசியமானதாகும். நம்பிக்கை அற்ற சூழ்நிலையில் கூட நாம் நம்பிக்கை நிறைந்த மக்களாக வாழ வேண்டும். நாம் அவ்வாறாக தொடர்சியான நம்பிக்கையில் ஏன் வாழ வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் இருக்கிறது.

## எதிர்பார்த்தது கிடைக்காதபொழுது, உள்ளான மனிதன் பெலவீனப்படுகிறான்

**நீதிமொழிகள் 13:12**
**நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும்.**

சிலவேளைகளில் நாம் எதிர்பார்த்தது நமக்குக் கிடைக்க தாமதங்கள் ஆகலாம். சிலகாரியங்களை குறிபிட்ட வருடத்தில் செய்துமுடிக்க நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், அந்த வருட முடிவில் கூட அது முடியாமல் போகலாம். உடனே, சரி அடுத்தவருடம் அதை முடித்துவிடலாம் என நாம் நினைக்கலாம். ஆனால், அடுத்த வருடமும் அது நடைபெறாமல் போகலாம். அவ்வாறாக, தொடர்ந்து எதிர்பார்த்தும் அது நடைபெறாதபொழுது நம் மனம் மிகவும் சோர்வடைந்து போகிறது. அதேவேளையில் நாம் எதிர்பார்த்தது நடந்துவிட்டால், நம் வாழ்க்கையில் ஏதோ ஒன்று புதியதாக துளிர்விட்டது போன்ற புத்துணர்வு ஏற்படும். நம் வாழ்வு புதுப்பிக்கப்பட்டது போன்ற உணர்வு ஏற்படும். அதன்மூலம் நம் வாழ்வில் முன்னேறிச் செல்ல நாம் உந்தப்படுகிறோம்.

## நம்பிக்கை நம் ஆத்தும நங்கூரம்

**எபிரேயர் 6:19**
**அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.**

நம்பிக்கை நம் ஆத்துமாவிற்கு நங்கூரம் போன்றது. ஆத்துமா என்ற வார்த்தை நம்முடைய மனது, விருப்பம், உணர்வுகளை உள்ளடக்கியதாகும். நம்பிக்கையோடு நம் ஆத்துமாவை இணைக்க, ஒரு

கப்பலை ஒரு இடத்தில் நிறுத்தப் பயன்படுத்தும் நங்கூரம் என்ற வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கப்பலுடைய நங்கூரம், கடலுக்கடியில் போடப்படும்பொழுது, ஒரு புயலின் நடுவில் சிக்கிய கப்பல் ஒரு நிலையான சூழ்நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. ஆகவேதான், ஆத்துமாவின் நங்கூரம், 'நம்பிக்கை' என்று வேதம் கூறுகிறது. அதன் பொருள் என்னவென்றால், எனக்கு நம்பிக்கை இல்லையென்றால், என்னுடைய விருப்பம், உணர்வு, சிந்தைகள் அடங்கிய ஆத்துமா குழப்பமான ஒரு சூழ்நிலையில் நிலையற்றதாக, பெலனற்றதாக மாறிப்போகிறது. மக்கள் முற்றிலும் நம்பிக்கையற்றவர்களாகப் போகும்பொழுது, வாழ்வில் தாக்கும் புயல்களால், தொடர்ந்து முன்னேற இயலாமல் போகிறார்கள். நம்பிக்கையை இழந்து எளிதில் முயற்சியைக் கைவிட்டு விடுகிறார்கள். இனிமேல் வாழ்வதில் ஒரு பயனும் இல்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள். நம்பிக்கை இழந்த சூழ்நிலையில், "என்னை ஒருவரும் கண்டுகொள்வதில்லை! எல்லாம் தவறாகவே நடக்கிறது! இந்த சூழ்நிலை ஒருபோதும் சரியாகப்போவதில்லை" என்ற சிந்தைகள் அவர்கள் மனதை நிரப்புகிறது. அவ்வறான சூழ்நிலைகளில் சிலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஆகவேதான், எவ்வளவு மோசமான சூழ்நிலைகளை சந்திக்க நேர்ந்தாலும் நம்பிக்கையை இழக்காதிருப்பது மிகவும் அவசியம். நம்பிக்கையே நம் ஆத்துமாவின் நங்கூரம்.

## நம்பிக்கைக்கு முன்வரவேண்டியது எதிர்பார்ப்பு

**எபிரேயர் 11:1**
**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.**

நம்பிக்கை எதிர்பார்ப்பைச் சார்ந்து இருப்பதால், எதிர்பார்ப்பு மிக அவசியமானதாகும். எதிர்பார்ப்பு நம்பிக்கைக்கு முன்னாக வரவேண்டியுள்ளது. நமக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கும்பொழுதுதான், அதன்மீது நம்பிக்கை வரும். ஒருவர் மிகவும் மோசமான வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கும்பொழுது, மருத்துவர் சொல்கிறார், "இவரால் இன்னும் ஒருசில நாட்கள்தான் உயிர்வாழ முடியும்" என்று, அந்த சூழ்நிலையில் எல்லோருமே நம்பிக்கை இழந்து போகிறார்கள். உடனே அவருடைய கடைசி கால புவிவாழ்வு, கடைசி வார்த்தைகள், அவரை அடக்கம் பண்ணும் எண்ணங்கள்தான் மக்கள் மனதை நிறப்புகிறது. அவ்வாறாக, ஒருவருக்கு எதிர்பார்ப்பு அற்றுப்போகும்பொழுது,

நம்பிக்கைக்கு ஒரு இடமும் இல்லாமல் போகிறது. ஏனெனில், எதிர்பார்ப்பு என்பது நம்பிக்கை வருவதற்கு துணைசெய்யும் ஒன்றாகும். ஒருவருக்கு வியாதி குணமாகும் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் போகும்பொழுது, கடவுளிடமிருந்து சுகம்பெறும் நம்பிக்கையும் மிகவும் கடினமாகிப் போகிறது. கடவுள் மீது வைக்கும் நம்பிக்கைக்கு, எதிர்பார்ப்பு முதலாவது தேவைப்படுகிறது. வியாதிபட்டு மரணப்படுக்கையில் இருக்கிற ஒருவருக்கு, அந்த வியாதி குணமாகி நன்றாக நடப்பேன் என்ற எதிர்பார்ப்பு முதலாவது வரவேண்டும். ஒருவேளை மருத்துவர்கள் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னால் கூட, எல்லாவற்றையும் படைத்த கடவுளால் இது முடியும், என்ற எதிர்பார்ப்போடு இருக்க வேண்டும். அந்த எதிர்பார்ப்பு முழுவதும் குணமாகும் நம்பிக்கையை அவருக்குக் கொண்டுவரும்.

# 4. நம்பிக்கையற்ற சூழ்நிலையை தலைகீழாக மாற்றும் கடவுள்

நாம் எவ்வளவு மோசமான சூழ்நிலையைச் சந்திக்க நேர்ந்தாலும், அது எவ்வளவுதான் அதிகமான நம்பிக்கையற்ற சூழ்நிலையாக இருந்தாலும், அந்த சூழ்நிலையை மாற்ற வல்ல கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற புரிதல் மிகவும் அவசியமானதாகும். ஆமென்! அவ்வாறான நம்பிக்கையற்ற சூழலை ஒருவேளை நீங்கள் உங்கள் திருமண வாழ்வில் சந்திக்கலாம், உங்கள் வேலைகளில் சந்திக்கலாம், உங்கள் பிள்ளைகளைப் பற்றியிருக்கலாம், உங்கள் பொருளாதாரம் சார்ந்ததாக இருக்கலாம், உங்கள் தொழில் சார்ந்ததாக இருக்கலாம், உங்கள் படிப்பு அல்லது வேறு எதுவாகக்கூட இருக்கலாம். அது எதுவாக இருந்தலும், அது எவ்வளவுதான் மிக மோசமான நம்பிக்கையே இல்லாத சூழ்நிலையாக இருந்தாலும், அதை மற்ற வல்ல கடவுள் மேலேயே நம் மனதெல்லாம் இருக்க வேண்டும். அவர் மாற்றுவார் என்ற எதிர்பார்ப்பை நாம் ஒருபோதும் விட்டுவிடக்கூடாது. வேதாகமத்தில் நமக்கு மிகவும் தெரிந்த, அவ்வாறான நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை கடவுள் எப்படி மாற்றினார் என்று நாம் இப்பொழுது பார்க்கலாம்.

## ஏழையான பெண்

ஒருவர் தன்னுடைய இரண்டு பிள்ளைகளையும் மிகுந்த கடன்களையும் விட்டுவிட்டு, தன் மனைவியையும் விதவையாக்கிவிட்டு மரித்துப்போகிற ஒரு சம்பவத்தை வேதாகமத்தில் (2 இராஜா. 4:1-7) வாசிக்கிறோம். அவருக்கு கடன்கொடுத்தவர்கள் வந்து அவளை மிரட்டி கடனைத் திருப்பித்தா இல்லையேல் உன் பிள்ளைகளை விற்றுவிடு என்கிறார்கள். அவளுடைய சூழ்நிலை எவ்வளவு பரிதாபமான, நம்பிக்கையற்ற சூழ்நிலை என்று பாருங்கள். அவள் கடவுளுக்கு ஊழியம் செய்த எலிசா என்பவரிடம் செல்கிறாள். தன்னுடைய சூழ்நிலையை விவரித்து அவரிடம் உதவி கேட்கிறாள். எலிசா அவளிடம், “உன் வீட்டில் என்ன இருக்கிறது?” என்று கேட்கிறார். அதற்கு அவள், “என் வீட்டில் ஒரு பாத்திரத்தில் எண்ணை மாத்திரம் தான் இருக்கிறது” என்கிறாள். உடனே எலிசா அவளிடம், “நீ போய் உன்னால் எவ்வளவு பாத்திரங்களை வாங்க முடியுமோ, அவ்வளவு பாத்திரங்களை வாங்கி, அதில் அந்த எண்ணையை ஊற்று” என்கிறார். அதிசயமாக அவள் ஊற்றின பாத்திரங்கள் அனைத்தும் எண்ணை நிறம்புகிறது. பின்பு எலிசா அவளிடம், “நீ அந்த எண்ணையை விற்று, உடன் கடன்களையெல்லாம்

தீர்த்தபின்பு, உன் வாழ்வை புதியதொரு வாழ்வாக துவக்கு” என்கிறார். கடவுள் அவ்வாறாக அவளுடைய நம்பிக்கைற்ற சூழ்நிலையை அந்த அற்புதம் மூலமாக தலைகீழாக மாற்றுகிறார்.

## திருமாண விருந்தில் நடந்த அற்புத நிகழ்ச்சி

திருமண வீட்டிற்கு விருந்தளிகளை அழைத்து விருந்துகொடுக்கும்பொழுது, திராட்சைப் பழச்சாறு தீர்ந்துபோய்விட்டது. அது ஒரு சிறிய காரியமாக இருந்தாலும், விருந்து கொடுப்பவர் மனதில், இந்தக் கூட்டத்தை எப்படிச் சமாளிப்பது என்று நம்பிக்கையை இழந்து திகைக்க வைக்கிற சம்பவமாகும். அவர்கள் அனைவரும் திகைத்துக்கொண்டிருக்கும்பொழுது, இயேசுவின் தாயாகிய மரியாள், “இயேசு உங்களிடம் என்ன செய்யச்சொல்கிறாரோ அதுபோலவே செய்யுங்கள்” என்று பந்தியில் பறிமாறுகிறவர்களிடம் சொன்னார். இயேசு அவர்களிடம், “நீங்கள் இந்த கல்சாடிகளில் தண்ணீரை நிறப்புங்கள். பின்பு, அதிலிருந்து எடுத்துக்கொண்டுபோய் பறிமாறுங்கள்” என்றார். அதிசயிக்கும் விதமாக அந்தத் தண்ணீர் திராட்சைப் பழச்சாறாக மாறியது. விருந்து சாப்பிட வந்திருந்தவர்கள் அனைவருக்கும் திருப்பதியாகப் பறிமாறப்பட்டது (யோவான் 2:1-11). அறப்புதமாக கடவுள் அவர்கள் தேவையைச் சந்தித்தார். ஆண்டவர் நம்மிடம் என்ன ஆலோசனை சொல்லுகிறாரோ அதைக்கேட்டு, நடக்கும்பொழுது, நம்முடைய நம்பிக்கையற்ற சூழ்நிலையை அவர் மாற்றுகிறார்.

## நம்பிக்கையற்ற இருளான சூழ்நிலையிலிருந்து ஒரு விடியல்

லூக்கா 5ம் அதிகாரத்தில், மீன்பிடிக்கும் தொழில் செய்த யாக்கோபு, யோவான், அந்திரேயாவோடு இயேசு சேர்ந்தபொழுது, அவர்கள் மீன்பிடி தொழிலில் ஒரு அற்புதம் நிகழ்ந்தைப் பார்க்கிறோம். அவர்கள் தொழிலே மீன்பிடிப்பதுதான். அவ்வாறு ஒருநாள் அவர்கள் மீன் பிடித்துக்கொண்டு இருக்கும்பொழுது, முழு இரவும் ஒரு மீனும் கிடைக்காமலேயே பொழுதுவிடிந்தது. அன்று காலையில் அவர்கள் வெறும்கையோடும், ஏமாந்த முகத்தோடும் வீடு திரும்ப ஆயத்தமாகும்பொழுது இயேசுவைச் சந்திக்கிறார்கள். அன்று காலையில் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க கூடிய மக்களிடம் பேச, இயேசு அவர்களிடம், “உங்கள் படகு கொஞ்ச

நேரம் கிடைக்குமா?" என்று கேட்கிறார். அவர்கள் சரி என்று சொல்ல, அந்தப் படகில் ஏறி இயேசு பிரசங்கம் செய்கிறார். பிரசங்கம் முடிந்ததும் இயேசு பேதுருவிடம், "இன்னும் ஒருமுறை நீங்கள் தண்ணீருக்குள் சென்று வலைவீசுங்கள் உங்களுக்கு அதிக மீன்கள் கிடைக்கும்" என்கிறார். அதற்குப் பேதுரு "ஐயா நாங்கள் இரவு முழுவதும் பாடுபட்டு ஏமாந்துபோய் வந்துள்ளோம்; இருந்தபோதிலும், உங்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, இப்பொழுது வலைவீசிப் பார்க்கிறோம்" என்கிறான். (லூக்கா 5:5). தன் முயற்சியில் ஒரு பலனும் கிடைக்கவில்லை என்று பேதுருவுக்குப் புரிந்திருந்த போதிலும், இயேசுவின் சொல்லுக்குக் கட்டுப்படச் சம்மதித்தான்.

நம் ஆண்டவரின் ஒரே ஒரு வார்த்தை, நம்பிக்கையற்று சூழ்நிலையை தலைகீழாக மாற்றியது. ஆண்டவரின் வார்த்தைக்குப் பேதுரு கீழ்படிந்தபடியால், ஒரு பொருளாதார அற்புதத்தைப் பார்க்கச் செய்தது.

## இஸ்ரவேல் சமுதாயம்

ஒரு காலகட்டத்தில் இஸ்ரவேல் சமுதாய மக்கள் இந்த உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டுப் போயிருந்தார்கள். அவர்களுக்கு மீண்டும் ஒன்று சேருவோம் என்ற நம்பிக்கை முற்றிலும் இல்லாமல் இருந்தது. எசேக்கியேல் 37ம் அதிகாரத்தில், ஒரு பள்ளத்தாக்கு முழுவதும் நிறைந்து கிடந்த எலும்புகளைப் பார்க்கிறார். இஸ்ரவேல் மக்களின் நிலையைத்தான் அவரை அவ்வாறு கடவுள் பார்க்கச் செய்தார். தேவ மனிதனே! இந்த எலும்புகள் அனைத்தும் இஸ்ரவேல் சமுதாய மக்களின் நிலையாகும். "எங்கள் எலும்புகள் காய்ந்துபோய்விட்டது! எங்களுக்கு ஒரு நம்பிக்கையும் இல்லை! நாங்கள் முற்றிலும் வெட்டுண்டு போய்விட்டோம்" என்று இஸ்ரவேல் மக்களே சொன்னார்கள (எசே. 37:11).

கடவுள் எசேக்கியேலை அந்த எலும்புகளைப் பார்த்து தீர்க்கதரிசனம் சொல்லச்சொன்னார். ஆகவே அந்த தீர்க்கதரிசி அந்த எலும்புகளிடம், "கடவுள் உங்களோடு சொல்வது என்னவென்றால்: என்னுடைய மக்களே கேளுங்கள், நான் உங்கள் கல்லறைகளைத் திறந்து, உங்களை வெளியே வரப்பண்ணுவேன்; உங்களை இஸ்ரவேல் நாட்டில் சேரப்பண்ணுவேன்" (எசே.37:12) இஸ்ரவேல் மக்கள் மீண்டும் ஒன்றாக சேறுவார்கள். அவர்களுக்கு ஒரு நாடு கிடைக்கும் என்று அந்த தீர்க்கதரிசி மூலமாக, கடவுள் முன்னறிவித்தார். அவர் அவ்வாறு முன்னறிவித்ததை மே 14,

1948 இல் நிறைவேற்றினார். உலகின் பல பகுதிகளில் சிதறப்பட்டுக் கிடந்த யூதர்கள் தங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பி வரத் துவங்கினார்கள்.

ஆகவே, நாம் இனி ஒரு நம்பிக்கையும் இல்லை என்று எண்ணும் சூழ்நிலையை கடவுள் மாற்ற வல்லவர். கல்லறைகளைத் திறந்து, அங்கு மரித்து மண்ணாகிக்கொண்டிருந்தவர்களை, வெறும் எலும்புகளாய் கிடந்தவர்களை, அவரால் உயரோடு கொண்டுவர முடியும். கடவுளுக்கு நம்பிக்கை அற்ற சூழ்நிலை என்று எதுவுமே இல்லை.

## ஆபிரகாமும் சாராளும்

கடவுள் ஆபிரகாம் சாராளோடு உங்கள் இருவருக்கும் ஒரு பிள்ளையைத் தருவேன் என்று வாக்குக்கொடுக்கும்பொழுது, அவர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். கடவுள் அவர்களுக்கு வாக்குக்கொடுக்கும் பொழுது, அது ஒரு ஆண் பிள்ளையாக இருக்கும், அவன்மூலம் உங்கள் சந்ததிகளை விண்ணில் உள்ள நட்சத்திரங்கள் போலவும், கடற்கரையில் உள்ள மணல்களைப் போலவும் ஏராளமாகப் பெறுகப்பண்ணுவேன் என்றார். அப்பொழுது, அவர்களுக்கு பிள்ளை பெறுவதற்கான சிறு நம்பிக்கைக்குக் கூட இடமில்லாதபடி இருந்தது. ஏனெனில், ஆபிரகாமிற்கு 99 வயது ஆகியிருந்தது. சாராளுக்கோ, பிள்ளையைக் கருவுறும் காலங்கள் முடிந்துபோயிருந்தது. அவர்கள் சூழ்நிலையை வேதம் இவ்வாறு கூறுகிறது:

**ரோமர் 4:17-18**
**17 அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.**
**18 உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.**

**17 அனைத்து சமுதாய மக்களும் எப்படி ஆபிரகாமுடைய சந்ததிகள் ஆகிறார்கள் என்றால், "ஒன்று இல்லாதிருக்கும்போதே, அதை**

**இருக்கிறதுபோல பேசுகிறவர்" என்றும், "மரித்தாலும் அதை உயிரோடு எழுப்புகிறவர்" என்றும் நீ என்னை நம்பினபடியால், "நான் உன்னை அனேக சமுதாய மக்களுக்கு அப்பாவாக ஏற்படுத்தினேன்" என்று ஆபிரகாமைக் குறித்து அவருடைய புத்தகத்தில், எழுதியுள்ளதின் அடிப்படையிலேயே ஆகும்.**

**18 அவர் எப்படி நம்பினார் என்றால், "நீ அனேக சமுதாயத்தார்களுக்குத் அப்பாவாக இருப்பாய்; உன்னுடைய சந்ததிகளை எண்ணிப்பார்க்க முடியாது" என்று கடவுள் அவருக்குக் கொடுத்த வாக்கை, நம்ப முடியாதபடி இருந்தபோதும், அதை அவர் நம்பினார். (எளிய தமிழ்)**

நாம் பின்பற்றுவதற்கு ஆபிரகாம் எவ்வளவு அற்புதமான உதாரணம். ஆபிரகாம், நம்ப முடியாத ஒன்றை நம்பினார். அப்படி ஒன்று நடக்க எந்த சாத்தியமும் இல்லாதிருந்தும், கடவுள் சொன்ன வார்த்தையைக் கேட்டு அது நிச்சயம் நடக்கும் என நம்பினார். அவர் அவ்வாறு நம்பினபடியால், கடவுள் சொன்னபடியே அவர் வாழ்க்கையின் சூழ்நிலை மாறினது.

ஆகவே, கடவுள் உங்களுக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுக்கும்பொழுது, “ஆண்டவரே! இதெல்லாம் சாத்தியமில்லை” என்று நீங்கள் ஒருபோதும் நினைக்காதீர்கள். செத்த ஒன்றிற்கு உயிர் கொடுக்கும் வல்லமையுள்ளவர், நம் கடவுள். ஆகையால், சாத்தியமில்லை என்று சொல்ல அவருக்கு ஒன்றுமே இல்லை. கடவுள் உங்களுக்கு வாக்குக்கொடுக்கும்பொழுது, அது ஒருவேளை சாத்தியமற்ற சூழ்நிலையாக இருக்கலாம். ஆனாலும், உங்களோடு பேசுகிற கடவுள் மரித்ததை உயிர்ப்பிக்கிறவர் என்பதையும், ஒன்று இல்லாதிருக்கும்பொழுதே, அது இருக்கிறதுபோல கூப்பிடுகிறவர் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். ஒரு சாதகமற்ற சூழ்நிலையை அவர் மாற்றுகிறவர் மாத்திரமல்ல, அந்த சூழ்நிலையை அடியோடு தலைகீழாக மாற்றுகிறவர் என்பதையும் மறவாதீர்கள். இல்லாத ஒன்றை பார்க்க வைப்பார். உங்கள் வீட்டில் சமாதானமே இல்லாமல் இருக்கலாம், அங்கே அவரால் சமாதானத்தைக் கொண்டுவர முடியும். உங்கள் உடல்நிலை சரியாக சாத்தியமற்ற சூழ்நிலையில் நீங்கள் இருக்கலாம்; ஆனால், அவரால் அதைச் சாத்தியமாக்க முடியும். உங்கள் வேலையில், தொழிலில், வீட்டில் வெற்றி என்பது சாத்தியமற்றதாகத் இருக்கலாம்; ஆனால், அவரால் அதைச் சாத்தியமாக்க முடியும்.

# 5. நம்பிக்கை அற்ற சூழ்நிலையில் நம்பிக்கை வைக்கத் தேவையானவைகள்

நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நம்பிக்கை தருவது எது? நம்பிக்கை என்பது வெறும் சிந்தனை சார்ந்த ஒன்றா? நேர்மறையான எண்ணங்கள்தான் நம்பிக்கையா? நேர்மறையான, நல்லதே நடக்கும் என்ற எண்ணங்கள் மட்டுமா நம்பிக்கை என்பது? உண்மையான நம்பிக்கை என்பது, கடவுளின் சத்தியத்தின் அடிப்படையில், அவருடைய வார்த்தையின் அடிப்படையில் எதிர்மறையான சூழலை எதிர்நோக்குவதே நம்பிக்கை ஆகும்.

**ரோமர் 4:18**
**உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.**

**அவர் எப்படி நம்பினார் என்றால், "நீ அனேக சமுதாயத்தார்களுக்குத் அப்பாவாக இருப்பாய்; உன்னுடைய சந்ததிகளை எண்ணிப்பார்க்க முடியாது" என்று கடவுள் அவருக்குக் கொடுத்த வாக்கை, நம்ப முடியாதபடி இருந்தபோதும், அதை அவர் நம்பினார். (எளிய தமிழ்)**

நம்புவதற்கு சாத்தியமே இல்லாத ஒன்றை கடவுள் சொன்னபடியால் ஆபிரகாம் அதை நம்பினார். நம்பிக்கை அற்ற சூழ்நிலையிலும், அதை நம்பினார். ஏனெனில், அதைச் சொன்னது கடவுள்! அவர் சொன்னது நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு அதை நம்பினார். அந்த எதிர்பார்ப்புதான் நம்பிக்கையின் அஸ்திபாரம். கடவுள் அதைச் சொல்லும்பொழுது, அது நடப்பதற்கான சாத்தியங்கள் இல்லாதபோதும் அதை அவர் நம்பினார்.

## கடவுளும் அவர் சொல்லும் வார்த்தைகளும்தான் நம் நம்பிக்கைக்கு அஸ்திபாரம்

**சங்கீதம் 38:15**
**கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன்; என் தேவனாகிய ஆண்டவரே, நீர் மறுஉத்தரவு கொடுப்பீர்.**

**சங்கீதம் 130:5**
**கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்.**

**ரோமர் 15:4**
**தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.**

**அநேக காலங்களுக்கு முன்பே, கடவுளுடைய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் நமக்கு புத்தி சொல்லிக் கொடுப்பதற்காக எழுதப்பட்டவைகள். நாம் எவ்வாறு நம்முடைய கஷ்டங்களையெல்லாம் சகித்து, கடவுள் நமக்கு தருவேன் என சொன்னவைகளை எதிர்பார்த்து, உற்சாகத்துடன் வாழவேண்டும் என நாம் கற்றுக் கொள்வதற்காகவே அவைகள் எழுதப்பட்டுள்ளன.**

நம்முடைய நம்பிக்கைக்கு காரணமும், ஆதாரமும், பெலனுமாக இருப்பவர் கடவுள். அவருடைய வார்த்தையே நம்முடைய நம்பிக்கைக்கு அடிப்படை ஆதாரமாகும். அவருடைய வேதம் நம்முடைய இருதயத்திற்கு பொறுமையையும், ஆறுதலையும் கொடுக்கிறபடியால் நாம் தொடர்ந்து நம்பிக்கையோடு வாழ்கிறோம்.

## நம்பிக்கையின் எதிர்காலம்

நாம் இதுவரை வாசித்தவைகளின் நடைமுறை சாத்திங்களை இப்பொழுது பார்க்கலாம். இதை வாசிக்கிற உங்களில் சிலர், “என்னுடைய எதிர்காலத்தைக் குறித்த எந்தவிதமான நம்பிக்கையும் எனக்கில்லை” அல்லது, “நான் வெகுகாலம் வாழப்போவதில்லை. இனி என் வாழ்க்கையில் நல்லது எதுவும் நடக்கப்போவதில்லை” என்று நினைக்கலாம். நான் உங்களுக்குச் சொல்வது என்னவென்றால், கடவுளாலும், அவருடைய வார்த்தையாலும் உங்களுக்கு ஒரு எதிர்காலம் உண்டு என்பதை நீங்கள் நம்பலாம். அவருடைய வார்த்தை இவ்வாறு சொல்லுகிறது:

**1 கொரிந்தியர் 2:9**
**எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.**

**ஆகவேதான், அவருடைய புத்தகத்தில், கடவுளிடத்தில் அன்பாயிருக்கிறவர்களுக்கு அவர் ஆயத்தம்பண்ணி வைத்துள்ள மகிமையான வாழ்வை, இதுவரை ஒருவரும் பார்த்ததில்லை, ஒருவரும் கேள்விப்பட்டதில்லை. அது குறித்து ஒருவர் மனதிலும் நினைத்துப் பார்த்ததும் இல்லை என்று எழுதியுள்ளது. (எளிய தமிழில்)**

நமக்கு எதிர்காலத்தில் நல்லதொரு வாழ்க்கை இருக்கிறது. நம் எதிர்காலத்தில் அற்புதமான ஒரு வாழ்க்கை நமக்காக் காத்திருக்கிறது. ஏனெனில், கடவுள் மீது அன்பாக இருக்கிறவர்களுக்கு அப்படியொரு வாழ்வை அவர் ஆயத்தம்பண்ணி வைத்துள்ளதாக அவருடைய வார்த்தை கூறுகிறது.

**எரேமியா 29:11**
**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.**

அவருடைய வார்த்தைதான் நம் நம்பிக்கையின் ஆதாரம். ஆகவே, நமக்கு நல்ல ஒரு எதிர்காலம் இருக்கிறது என்று நாம் நிச்சயம் நம்பலாம். நம்முடைய தற்காலிக சூழ்நிலை, ஒருபோதும் நம்முடைய கடைசி காலம்வரை தொடரப்போவதில்லை. கடவுள் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் நம்முடைய எதிர்காலம் பெலமுள்ளதாக, வெற்றியுள்ளதாக, பாதுகாப்பு நிறைந்ததாக அமையப்போகிறது. நம்முடைய தற்காலிக சூழ்நிலை நம் மனதைச் சோர்வாக்க ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

# வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கை

நம் வாழ்வில் நாம் கடைசிவரை தோல்விகளைத்தான் சந்திக்க வேண்டுமோ? வெற்றி ஒருபோதும் இல்லையோ? என உங்களில் சிலர் நினைக்கலாம். உங்கள் முயற்சிகள் ஒவ்வொன்றிலும் தோல்விகளை அடைந்திருக்கலாம். இதுவரை வெற்றி என்பது உங்களுக்கு எட்டாக் கனியாக இருந்திருந்திருக்கலாம். நீங்கள் பின்வரும் கடவுள் வார்த்தையை உறுதியாக நம்பவேண்டும்:

**சங்கீதம் 1:1-3**
**1 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**
**2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**
**3 அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.**

**1 கடவுளுக்குப் பிடிக்காதவைகளைச் செய்து, மற்றவர்களைக் கேலிசெய்து சந்தோசப்படுகிறவர்களோடு நட்புக்கொள்ளாது, அப்படிப்பட்டவர்களோடு பழகி, அவர்கள் சொல்வதை கேட்டு வாழாதபடி தன் வாழ்வை சுத்தமாகக் காத்துக்கொள்ளுகிறவர் உண்மையிலேயே புண்ணியம் பெற்றவர்கள்.**
**2 நித்தியக் கடவுளின் கட்டளைகளை இரவும் பகலும் ஆவலோடு தியானிக்கிறவர் வாழ்வு முழுமையும்,**
**3 வெற்றிகள் நிறைந்த வாழ்வாக இருக்கும். வற்றாத நீர் ஓடும் ஆற்றங்கரையில் உள்ள மரத்தில் இலைகள் ஒருபோதும் காய்ந்து, சருகாகாதது போல, அவர்கள் வாழ்வு ஒருபோதும் வாடுவதில்லை. மேலும், அப்படிப்பட்ட மரம் செழித்து வளர்ந்து, பூத்துக்காய்க்கும் காலமெல்லாம் நல்ல பழங்களைத் தருவதுபோல, அவர்கள் வாழ்வு செழிப்பாக இருக்கும். (எளிய தமிழ்)**

திரளாக கனிகொடுக்கும் மரங்களாக உங்கள் வாழ்வை நினைத்துப் பாருங்கள். நீங்கள் செய்யும் செயல்களில் எல்லாம் வெற்றி பெறுவீர்கள் என்று எண்ணுங்கள். ஏனெனில், அதுதான் உங்களைப் பற்றிய கடவுளுடைய வார்த்தை. கடவுள் உங்களுக்காகச் செய்ததை தற்காலிக சூழ்நிலை அழிக்க இடம் கொடாதீர்கள்.

## உங்கள் கனவுகள் நிகழ்வாகும் நம்பிக்கை

நீங்கள் கண்ட கனவுகள் ஒருபோதும் நடக்கப் போவதில்லை என்று உங்கள் நம்பிக்கைகளை இழந்திருக்கலாம். உங்களிடம் கடவுள் சொல்கிறார்:

**சங்கீதம் 37:4-5**
**4 கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.**
**5 உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.**

**4-5 நீ செய்ய ஆசைப்படும் அனைத்திலும் நித்தியக்**
**கடவுளின் வழிநடத்துதல் வேண்டும் என அவரைச் சார்ந்து வாழ்ந்தால்,**
**உன் ஆசைகள் நிறைவேற, அவர் உதவிகள் உனக்குக் கிடைக்கும்;**
**அப்பொழுது, அவர் செயலை எண்ணி உன் மனதில் மகிழ்ச்சி பொங்கும்.**
**(எளிய தமிழ்)**

நான் கண்ட கனவு ஒருபோதும் நிகழ்ப்போவதில்லை என்ற சூழ்நிலையை நான் சந்தித்திருக்கிறேன். நான் வளரும்பொழுது, பெங்களூர் நகரில் ஒரு சபையை ஸ்தாபித்து, உலகமெங்கும் உள்ள அநேக சமுதாயங்களைச் சந்திக்க வேண்டும் என்று கனவு கண்டேன். பல சம்பவங்கள் என் வாழ்வில் நிகழ்ந்தது, ஆனால் நான் கண்ட இந்தக் கனவு என்வாழ்வில் நிகழப்போவதில்லை என்ற சூழ்நிலையை நான் சந்திக்க நேர்ந்தது. அதற்கான ஒரு முதல் அடி கூட எடுத்துவைக்க முடியவில்லை. ஆனால், கடவுளுடைய வார்த்தை உனக்கு நல்ல எதிர்காலத்தைத் தருவேன் என்ற நம்பிக்கையைக் கொடுத்தபடியால், என் நம்பிக்கை செத்துப்போக நான் இடம்கொடுக்கவில்லை. என் கண்களுக்குத் தெரியாத அதை, என் காதுகளுக்குக் கேளாத அதை அவர் எனக்காக ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். மேலும், அவர்மீது நான் மனமகிழ்ச்சியாய் இருந்தால், அவர் என் இருதயத்தின் வேண்டுதல்களைக் கொடுப்பார் என்று அவருடைய வார்த்தை மேலும் சொல்லுகிறது. என் சூழ்நிலை மேலும் மேலும் மோசமாகிக்கொண்டிருக்கும்பொழுது, கடவுளுடைய இந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என் மனதில் ஞாபகமாக வந்துகொண்டே இருந்தது. என்னுடைய சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், அவருடைய வார்த்தைகளை ஆதாரமாக வைத்து, அவைகளை உறுதியாக பிடித்துக்கொண்டேன். ஆகவே, இப்பொழுது அந்தக் கனவுகள், நிகழ்வதை நான் பார்க்கிறேன்.

# உங்கள் பிள்ளைகளைக் குறித்த நம்பிக்கை

உங்கள் பிள்ளைகளைக் குறித்த நம்பிக்கைகளை நீங்கள் இழந்திருக்கலாம். ஒருவேளை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு கடவுளுடைய வார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்து, ஆவிக்குரிய பயிற்சிகளை அளித்து நன்கு வளர்த்திருந்தபோதிலும், இப்பொழுது அவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்பொழுது, நீங்கள் எதிர்பார்த்திராத ஒரு சூழலில் அவர்கள் சிக்கியிருப்பதைப் பார்க்கலாம். ஒருவேளை அவர்கள் படிப்பை கைவிட்டு, மதுவுக்கோ, போதை வஷ்துகளுக்கோ அடிமையாகி இருக்கலாம். நான் வளர்த்ததெல்லாம் வீணாகப் போய்விட்டதே என்று நீங்கள் நினைக்கலாம். இனி ஒரு மாற்றமும் வரப்போவதில்லை, என்று உங்கள் பிள்ளை மீதான நம்பிக்கையை நீங்கள் முற்றிலும் இழந்திருக்கலாம். ஆனால், நான் உங்களுக்குச் சொல்வது, "நம்பிக்கை இழந்துபோகாதிருங்கள்". ஏனெனில், கடவுளுடைய வார்த்தை இப்படிச் சொல்கிறது:

**சங்கீதம் 112:1-2**
**1 அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**
**2 அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.**

"கடவுளே! நான் உங்கள் வார்த்தையை நம்புகிறேன்! என் பிள்ளைகள் பலத்திருப்பார்கள் என்று உங்களுடைய வார்த்தைகள் சொல்கிறது." என்று அவரிடம் சொல்லுங்கள். இதின் பொருள் என்னவென்றால் உங்கள் பிள்ளைகள் இந்த பூமியிலே ஏதோ ஒரு விதத்தில் மாறப்போகிறார்கள். கடவுளுடைய நாட்டிற்காக அவர்கள் எதையோ செய்யப்போகிறார்கள். அவர்கள் இந்த பூமியில் வீணாகப் போகப்போவதில்லை. அவர்கள் கடவுளுக்காக இந்த பூமியில் எதையோ சாதிக்கப்போகிறார்கள்.

**ஏசாயா 54:13**
**உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.**

மேலுள்ள வசனம் உங்கள் பிள்ளைகளைக் குறித்த நம்பிக்கைக்கு ஆதாரமாக இருப்பதாக. நீங்கள் சொல்வதையெல்லாம் உங்கள் பிள்ளை காதுகொடுத்துக் கேட்காவிட்டாலும், தொடர்ந்து அந்த வார்த்தையை

நம்புங்கள். ஏனெனில், கடவுள் சொன்ன அந்த வார்த்தையை நீங்கள் தொடர்ந்து நம்பலாம்.

## சுகமடைதல் குறித்த நம்பிக்கை

உங்கள் சிலர் வியாதிகளால் பாதிக்கப்பட்டிருக்கலாம். மருத்துவர்களும் இந்த வியாதிக்கு மருந்தோ, மருத்துவமோ இல்லை என்று சொல்லியிருக்கலாம். ஆனால், கடவுளுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்றால்:

**சங்கீதம் 103:3**
**அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,**

உங்கள் நம்பிக்கைக்கு ஆதாரம் கடவுளுடைய இந்த வார்த்தைதான். இந்த வார்த்தை மூலம் உங்கள் நம்பிக்கையை உயிரோடு இருக்கச் செய்யுங்கள். உங்கள் வியாதி குணமாகி நீங்கள் நல்ல சுகத்தோடு வாழ்வதை நீங்களே எண்ணிப்பாருங்கள்.

**நீதிமொழிகள் 3:7-8**
**7 நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.**
**8 அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்.**

இவ்வாறாக கடவுள் மீது நீங்கள் கொண்டுள்ள பயம், உங்கள் உடலில் உள்ள வியாதியைக் குணப்படுத்தி, சுகத்தைக் கொண்டுவரும்.

**கடவுளாலும் அவருடைய வார்த்தையாலும், நம்பிக்கை அற்ற சூழ்நிலையிலும் நம்பிக்கையோடு இருக்க முடியும்.**

# 6. நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நான் என்ன செய்வது?

ரோமர் 4:17-21
17 அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று
எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை
உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல்
அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும்
தகப்பனானான்.
18 உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான்
அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும்,
அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.
19 அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய
நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும்,
சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்.
20 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச்
சந்தேகப்படாமல்,
21 தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற
வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை
மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.

17 அனைத்து சமுதாய மக்களும் எப்படி ஆபிரகாமுடைய சந்ததிகள்
ஆகிறார்கள் என்றால், "ஒன்று இல்லாதிருக்கும்போதே, அதை
இருக்கிறதுபோல பேசுகிறவர்: என்றும், "மரித்தாலும் அதை உயிரோடு
எழுப்புகிறவர்" என்றும் நீ என்னை நம்பினபடியால், "நான் உன்னை அனேக
சமுதாய மக்களுக்கு அப்பாவாக ஏற்படுத்தினேன்" என்று ஆபிரகாமைக்
குறித்து அவருடைய புத்தகத்தில், எழுதியுள்ளதின் அடிப்படையிலேயே
ஆகும்.
18 அவர் எப்படி நம்பினார் என்றால், "நீ அனேக சமுதாயத்தார்களுக்குத்
அப்பாவாக இருப்பாய்; உன்னுடைய சந்ததிகளை எண்ணிப்பார்க்க முடியாது"
என்று கடவுள் அவருக்குக் கொடுத்த வாக்கை, நம்ப முடியாதபடி
இருந்தபோதும், அதை அவர் நம்பினார்.
19 ஏனெனில், கடவுள் அவரிடம் இந்த வாக்கை கொடுக்கும்பொழுது,
அவருக்கு கிட்டத்தட்ட 100 வயது ஆகியிருந்தபடியால், தன்னுடைய உடலில்
பிள்ளை உருவாகத்தக்க பெலன் இல்லாதிருந்தது; அவருடைய
மனைவியாகிய சாராளுக்கும் கர்ப்பமடையும் வயது தாண்டியிருந்தது.
அப்படியிருந்தும், கடவுள் சொன்ன வாக்கை நம்புவதில் அவர் இளமையாக
இருந்தார்.
20-21 கடவுள் சொன்னது நடக்குமோ? நடக்காதோ? என்று அவர்
சந்தேகப்படாமல்; கடவுள் ஒரு வாக்கைக் கொடுத்தால், அவர் அதை

**நிச்சயம் நிறைவேற்றுவார் என்று அவரை முழுமையாக நம்பி, அவருக்கு நன்றி சொல்லிக்கொண்டிருந்தார். (எளிய தமிழில்)**

நம்முடைய நம்பிக்கையற்ற சூழ்நிலையை கடவுள் தலைகீழாக மாற்றவேண்டி, நாம் என்ன செய்யவேண்டும்? ஆபிரகாமுடைய வாழ்விலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? அவருடைய நம்பிக்கையற்ற சூழ்நிலையை கடவுள் தலைகீழாக மாற்றும்படியாக அவர் என்ன செய்தார்? அவருக்கு கடவுள் என்ன வாக்குக்கொடுத்தாரோ அது நடக்கும் என்று அவர் நம்பினார் என்று அவருடைய வேதம் சொல்லுகிறது. (ரோமர் 4:18). கடவுள் என்னவெல்லாம் சொன்னாரோ, அதெல்லாம் நடக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? உதாரணமாக, "நீ செய்வதெல்லாம் உனக்கு வாய்க்கும்" என்று கடவுளுடைய வார்த்தை சொல்லுகிறது. அதை நீங்கள் நம்புகிறீர்களா?

## கடவுள் என்ன சொன்னாரோ அதுபோலவே நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு நம்புங்கள்.

கடவுளும் அவர் வார்த்தையும் ஒன்றுதான். அவருடைய வார்த்தையை நம்புவதும் அவரை நம்புவதும் ஒன்றுதான். அவருடைய வார்த்தையின்படி நீங்கள் எதிர்பார்க்கிற எல்லாவற்றையும் நீங்கள் நம்ப வேண்டும். நம்ப முடியாத சூழநிலையில் நீங்கள் இருந்தாலும், கடவுள் கொடுத்த வாக்கின்படி நிச்சயம் நடக்கும் என்று நீங்கள் நம்ப வேண்டும். உங்களுடைய இந்த நம்பிக்கையை நீங்கள் ஒருபோதும் விட்டுவிடாதிருங்கள்.

## உங்களுடைய நம்பிக்கை அற்ற சூழ்நிலை, கடவுள் சொன்ன வார்த்தையின்மீதுள்ள நம்பிக்கையை இழக்க ஒருபோதும் விட்டுவிடாதீர்கள்

"ஏனெனில், கடவுள் அவரிடம் இந்த வாக்கை கொடுக்கும்பொழுது, அவருக்கு கிட்டத்தட்ட 100 வயது ஆகியிருந்தபடியால், தன்னுடைய உடலில் பிள்ளை உருவாகத்தக்க பெலன் இல்லாதிருந்தது; அவருடைய மனைவியாகிய சாராளுக்கும் கர்ப்பமடையும் வயது தாண்டியிருந்தது. அப்படியிருந்தும், கடவுள் சொன்ன வாக்கை நம்புவதில் அவர்

இளமையாக இருந்தார்." என்று ரோமர் 4:19-ல் ஆபிரகாமைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

அவருடைய உடலில் பிள்ளைபெற்றெடுக்கும் பெலன் இல்லை. அவருடைய சூழ்நிலை ஒன்றும் சாதகமாக இல்லை. இருந்தபோதிலும், கடவுள் கொடுத்த வாக்கின்மீதான தன்னுடைய நம்பிக்கை பெலவீனமடைய அவர் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. ஆகவே, உங்கள் சூழ்நிலையைப் பார்த்து, இது ஒருபோதும் நடக்காது என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்.

இருந்தபோதிலும், நீங்கள் உங்கள் சூழ்நிலையை முற்றிலும் நிராகரிக்க வேண்டியதில்லை. ஆனால், கடவுள் வார்த்தையின் மீதுள்ள நம்பிக்கையை உங்கள் சூழ்நிலையை வைத்து பலமிழக்கச் செய்ய அனுமதிக்காதீர்கள். மாறாக, கடவுள் கொடுத்த வாக்கு உங்கள் வாழ்வில் நிறைவேறினால் எப்படியிருக்கும் என்பதை உங்கள் கற்பனைக் கண்கொண்டு வரைந்துபாருங்கள். உதாரணமாக, நீங்கள் முற்றிலும் குணமடைந்ததைக் நினைத்துப் பாருங்கள். உங்கள் வாழ்வில் வெற்றியடைந்ததாக நினைத்துப் பாருங்கள். உடைந்துபோன உங்கள் திருமண உறவு சீரடைந்ததாக நினைத்துப் பாருங்கள். உங்கள் பிள்ளைகள் மனம்திரும்பி கடவுளுக்கு சேவை செய்வதாக நினைத்துப் பாருங்கள். கடவுள் வார்த்தையால், உங்கள் மனதில் இவைகளை ஒரு படம்போல வரைந்து, அவைகளை திரும்பத் திரும்ப நினைத்துப் பாருங்கள்.

ஒருநாள் இரவு ஆபிரகமை கடவுள் அவனுடைய கூடார வீட்டிலிருந்து வெளியே வரச்சொல்லி, வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் பார்க்கச் சொல்லி, "உன்னுடைய சந்ததிகள் அதுபோல இருக்கும்" என்றார். (ஆதியாகமம் 15:5). அதுமுதல் ஆபிரகாம் கடவுள் தனக்குக் கொடுத்த வாக்கு இவ்வாறாக நிறைவேறும் என்று அந்தக் காட்சியை தன் மனதில் வைத்திருந்தார். அதன்பின்பு, அவன் வானத்தில் நட்சத்திரங்களைப் பார்க்கும்பொழுதெல்லாம், தன் சந்ததிகளை அவ்வாறு எண்ணிக்கைக்கு அடங்காத அளவில் இருப்பதைப் பார்த்தான். அவன் தன் உடலில் பிள்ளையைப் பெற்றெடுக்கப் பெலனில்லாததை நினைக்கும் பொழுது, தன் மனைவி சாராள் கர்ப்பமடையும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலையைப் பார்க்கும் பொழுதும், கடவுள் சொன்ன அந்த வாக்கை நினைத்துப் பார்த்து. என் சந்ததிகள் வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல,

கடற்கரையில் உள்ள மணலைப்போல எண்ணமுடியாத அளவில் இருக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தார்.

அனேக முறை நான் ஆயிரமாயிரமான மக்களுக்கு கடவுளுடைய வார்த்தையைச் சொல்லிக்கொடுப்பதை நினைத்துப் பார்த்திருக்கிறேன். எங்களுடைய திருச்சபை, நகரத்தில் 5 இடங்களில் பல ஆயிரம் மக்களோடு சேர்ந்து கடவுளை ஆராதிப்பதை நினைத்துப் பார்த்திருக்கிறேன். ஆகவே, ஞாயிறு ஆராதனையில் காலியாகக் கிடந்த இருக்கைகள் என்னுடைய அந்த நம்பிக்கையைப் பெலவீனப்படுத்த முடியவில்லை. ஏனெனில், என்னுடைய ஊழியத்தின் நிறைவு நாட்கள் எப்படியிருக்கும் என்ற படம் என் மனதில் அழியாது நின்றது. ஆகவே, உங்களுடைய தற்காலிக சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், உங்கள் வாழ்வின் முடிவைக் குறித்த உங்கள் எதிர்பார்ப்பை மனதில் இருத்தி, நம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடாதிருங்கள்.

## தொல்லைகளைச் சகித்து, வாக்குப்பெற்றதை அடைந்தே தீருவது என்ற தீர்மானத்தோடான வாழ்வு

ஆபிரகாமின் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் இன்னொரு முக்கயமான காரியம், அவர் தடுமாற்றங்கள் எதுவும் இல்லாது, கடவுள் சொன்ன வாக்கை நம்பி வாழ்ந்தார். (ரோமர் 4:20). கடவுள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவார் என்று உறுதி அவர் மனதில் இருந்தது. அதற்கிடையில் பல தொல்லைகள் வந்தபோதிலும் அவைகளைச் சகித்து, கடவுள் கொடுத்த வாக்கை அடைந்தே தீருவது என்ற தீர்மானத்தோடு வாழந்தார். ஆகவே, நம்பிக்கையோடு கூட, கடவுள் கொடுத்த வாக்கை அடைந்தே தீருவது என்ற தீர்மானத்தோடு, இடையில்வரும் தொல்லைகளைச் சகித்து, வாழவேண்டியது மிகவும் அவசியம். ஆகவேதான், “நாம் இதுவரை முழுமையாக அனுபவிக்காத ஒன்றை, அனுபவிக்கப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பு இருக்கும்பொழுதல்லவா, அதற்காக பொறுமையோடும், ஆவலோடும் காத்திருப்போம்?” என்று ரோமர் 8:25-ல் சொல்லப்பட்டுள்ளது. நம்மில் அனேகர், அனேக காரியங்களுக்காக நம்பிக்கையோடு இருந்தாலும், அது உடனே நடக்கவேண்டும் என நினைக்கிறோம். ஆனால், வேதமோ, நாம் எதிர்பார்க்கிற இதுவரை பார்க்காத ஒரு காரியத்திற்காக பொறுமையோடு காத்திருக்க வலியுறுத்துகிறது. ஆகவே, சீக்கிரம் நடக்கவில்லை என்று நம்பிக்கையை இழக்காது, பொறுமையோடு காத்திருங்கள்.

**1 தெசலோனிக்கேயர் 1:3**
**“எப்படியெனில், நீங்கள் கடவுளை நம்பி செய்கிற கஷ்டமான வேலைகளையும், மற்றவர்கள் மீது உங்களுக்கு உள்ள அன்பால் அவர்களுக்கு உதவுகிறதையும், நம் வாழ்வை ஆளும் இயேசு கிறிஸ்துவிடம் உங்களுக்கு கிடைக்கப்போகிற பலனை எதிர்பார்த்து நீங்கள் கஷ்டங்களைச் சகிக்கிறதையும், நினைத்து அவருக்கு நன்றி கூறுகிறோம்.” என்று பவுல் கூறுகிறார்.**

ஆகவே, கடவுளுடைய வார்த்தையின்படியான நம்பிக்கை என்பது பொருமையோடு காத்திருப்பதாகும்.

**புலம்பல் 3:26**
**கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது.**

உண்மையான நம்பிக்கை இருக்கும்பொழுது, மனதில் எந்தவித பதற்றமும் இல்லாமல் ஒருவித அமைதி காணப்படும். அது நிச்சயம் வரும், நடக்கும் என்ற எண்ணம் மேலோங்கி காணப்படும். உங்கள் மனதில் குழப்பமோ, சஞ்சலமோ, நான் விரும்பியதை அடைவதற்கு யார், என்ன செய்தாலும் பரவாயில்லை என்ற எண்ணமோ இல்லாதிருக்கும். மாறாக, கடவுள் கொடுத்த வாக்கின்படி எனக்கு நடக்கும் என்ற மன அமைதி காணப்படும். அதில் உறுதியாகவும், பொறுமையோடும் இருப்பீர்கள். அந்த தீர்மானத்தில் உறுதியோடும், கடவுள் வார்த்தைக்கு தொடர்ந்து கீழ்படிந்தும் வாழ்வீர்கள். ஆகவே, இலகுவான வழி என்று எதையும் நீங்கள் தெரிந்தெடுக்க வேண்டாம். அவ்வாறான செயல் உங்களை மேலும் குழப்பத்தில் சிக்க வைக்கும்.

# சந்தோசத்தில் நிறைந்து கடவுளைத் துதித்துக்கொண்டிருங்கள்

கடவுள் சொன்னது நடக்குமோ? நடக்காதோ? என்று அவர் சந்தேகப்படாமல்; கடவுள் ஒரு வாக்கைக் கொடுத்தால், அவர் அதை நிச்சயம் நிறைவேற்றுவார் என்று அவரை முழுமையாக நம்பி, **அவருக்கு நன்றி சொல்லிக்கொண்டிருந்தார்**. (ரோமர் 4:20-21)

உங்களுக்கு ஒன்றின்மீது ஒரு எதிர்பார்ப்பு இருக்கும்பொழுது, மனதில் மகிழ்ச்சி இருக்கும். கடவுள் சொன்ன ஒரு சொல்மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கும்பொழுது உங்கள் மனதில் சந்தோசம் இருக்கும். உங்கள் வாழ்வின் ஒருசில சூழ்நிலைகளின் அடிப்படியில் நீங்கள் ஒருசில வேளைகளில் சந்தோசமாக இருக்கலாம். ஆனால், நம்பிக்கையின் அடிப்படையிலும் நீங்கள் சிலவேளைகளில் சந்தோசமாக இருக்கலாம். உங்களில் சிலர் சிறுவர்களாக இருக்கும்பொழுது, உங்கள் பிறந்தநாள் நெருக்கிவருவதை எதிர்பார்த்து சந்தோசப்பட்டிருப்பீர்கள். எங்களுடைய மகள் ரூத், இவ்வருடம் அவளுடைய பிறந்தநாளைக் கொண்டாடினாள். பிறந்தநாள் வருவதற்கு பல வாரங்களுக்கு முன்பே முதல் வாரத்திலேயே அவள் மனதில் சந்தோசம் நிரம்பியிருந்தது. எதிர்பார்ப்பினால் அவள் மனது சந்தோசத்தில் நிறைந்து இருந்தது. பிறந்த நாளுக்கு முந்தய இரவில் அவள் என்னோடு, “அப்பா நான் நாளைக் காலை எழுந்தவுடன், நீங்கள் என்னிடம், ‘பிறந்தநாள் காணும் செல்லப் பிள்ளையே! காலைவணக்கம்!’ என்று சொல்லவேண்டும்” என்று சந்தோசத்தோடு கூறிப் படுக்கச் சென்றாள். உண்மை என்னவென்றால், மறுநாள்தான் அவள் பிறந்தநாள் கொண்டாகப் போகிறாள்; ஆனால் இன்றே அவள் மனதில் சந்தோசம் நிரம்பி வழிகிறது. அவளுடைய பிறந்த நாள் இன்னும் வரவில்லை. ஆனால் வரும் என்ற எதிர்பார்ப்பில் அவள் மனதில் சந்தோசம். கிறிஸ்தவர்களாகிய நாமும் அவ்வாறே சந்தோசமாக இருக்கவேண்டும். நாம் கடந்து செல்லும் இந்த கஷ்டமான சூழ்நிலையை கடவுள் நிச்சயம் மாற்றுவார் என்ற எதிர்பார்ப்பில் கிடைக்கும் சந்தோசம் அது.

**ரோமர் 15:13**
**பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.**

**அவ்வாறாக கடவுள் வாக்குக்கொடுத்ததை நிறைவேற்றுவார் என்ற எதிர்பார்ப்பையும் அவரே நமக்குத் தருகிறார். நீங்கள் அவரை அவ்வாறாக நம்பி வாழ்வதால், அவர் உங்களுக்கு நிறைவான சந்தோசத்தையும், சமாதானத்தையும் தருவாராக. அதன்மூலமாக, சுத்தமான ஆவியானவர் தரும் பெலத்தினாலே, அவரிடம் இவ்வாறான எதிர்பார்ப்பு உங்களுக்கு பெருகுவதாக. (எளிய தமிழில்)**

**ரோமர் 12:12**
**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.**

**விடாமல் ஜெபித்துக்கொண்டு, உங்களுக்குக் கிடைக்கப்போகிற வாழ்க்கை எதிர்பார்த்து, உங்களுக்கு வருகிற கஷ்டங்களைச் பொறுமையோடு சகித்துக்கொண்டு, சந்தோசமாக இருங்கள். (எளிய தமிழில்)**

நம் மனது கடவுள் மீதுள்ள நம்பிக்கையில் நிறைந்து காணப்படும்பொழுது, நம் மனதில் சந்தோசமும் சமாதானமும் இருக்கும். அவருடைய வார்த்தையில் நாம் நம்பிக்கையோடு இருக்கும்பொழுது, சந்தோசமும் சமதானமும் நம் வாழ்வில் இருக்கும். சிலவேளைகளில் கடவுள் கொடுத்த வாக்கு நிறைவேற தாமதமாகும்பொழுது, சிலர் குறைகூறவும், புலம்பவும் தொடங்குகிறார்கள். அவர்களுக்கு தேவை என்னவென்றால், கடவுள் சொன்ன வாக்கு நிறைவேறிய சம்பவத்தை மனதில் கொண்டுவருவதாகும். தற்போதைய சூழ்நிலையைப் பார்த்து அதைரியப்படாமல், நம்பிக்கையோடு அந்த வாக்கு நிறைவேறுகிறதை நம் கண்முன் கொண்டுவரவேண்டும். அப்பொழுது, அந்த காட்சி ஒருநாள் நிச்சயம் நடக்கும் என்ற நம்பிக்கையில் மனதில் சந்தோசமும், சமாதானமும் இருக்கும்.

**சங்கீதம் 42:5**
**என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.**

**உடனே நான் என் மனதிடம், "ஏங்காதே என் மனமே! கடவுள் நிச்சயம் உனக்கு உதவி செய்வார் என நம்பிக்கையோடு காத்திரு; கடவுள் நிச்சயம் உன் கஷ்டங்களைத் தீர்ப்பார்; அவர் உதவி உனக்கு கிடைத்தவுடன், (மகிழ்ச்சியோடு) அவருக்கு நன்றி சொல்லும் வாய்ப்பு மீண்டும் உனக்கு கிடைக்கும்" என்று சொன்னேன். (எளிய தமிழில்)**

**சங்கீதம் 71:14**
**நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.**

நமக்கு கடவுள் சொன்ன வாக்கின்மீது நம்பிக்கை இருக்கும்பொழுது, நம் மனதில் சந்தோச உணர்வுகள் காணப்படும், அதின் விளைவாக கடவுளை புகழ்ந்து பேசும் சக்தி நமக்கு கிடைக்கிறது. “இந்த கஷ்டமான சூழநிலையில் நான் எப்படி சந்தோசமாக இருக்கமுடியும்?” என்று நீங்கள் ஒருவேளை கேட்கலாம். ஆனால், “நம்பிக்கையிலே சந்தோசமாக இருங்கள் என்று வேதம் சொல்கிறது. கடவுளை நாம் எப்படித் துதிக்க முடியம்? அவர் கொடுத்த வாக்கின்மீது நம்பிக்கை வைப்தினால் மாத்திரமே அவரை நாம் துதிக்க முடியும். ஒருவேளை இன்றய சூழ்நிலை மிகமோசமான சூழ்நிலையாக இருக்கலாம். இன்றய சூழ்நிலை மிக கஷ்டமான சூழ்நிலையாக இருக்கலாம். இருந்தபோதிலும், கடவுளை நீங்கள் துதிக்கலாம். ஏனெனில், அந்த சூழ்நிலை என்றுமே அப்படி இருக்கப்போவதில்லை. கடவுள் அதை மாற்றப்போகிறார். ஏனெனில், வேதம் கூறுகிற கடவுள், நம்பிக்கையற்ற சூழ்நிலையை அதற்கு நேர்மாறாக மாற்றுகிற கடவுளாகும். அவ்வாறு உங்கள் வாழ்விலும் அவர் செய்வார். நம்பிக்கையோடு எதிர்பார்த்து காத்திருங்கள்.

நாம் பாடும் ஒரு பாடல் உண்டு. அந்தப் பாடலின் வரிகள் மிகவும் உற்சாகமூட்டும் வரிகளாகும்:

கடவுளைத் துதி

உங்கள் பாடுகளின் உச்சத்தில் நீங்கள் இருக்கும்பொழுது

உங்கள் கனவுகளையெல்லாம் அது சிதறடிக்கும்பொழுது

உங்கள் நம்பிக்கைகளையெல்லாம் அவை சுக்குநூறாக உடைத்தெரியும்பொழுது,

சாத்தானின் திட்டங்கள் வெளிப்படுகிறது

உங்கள் மனம் குழம்பித் தவிக்கிறது

உலகில் காணப்படும் பயம் உங்களைக் கவ்விப் பிடிக்கிறது

எந்த நம்பிக்கையில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களோ

அதுவே மறைந்துவிடும்போல் இருக்கிறது

(பல்லவி)

கடவுளைத் துதியுங்கள்

அவரைத் துதிக்கிறவர்கள் மூலமாக அவர் தன் வேலைகளைச் செய்கிறார்

கடவுளைத் துதியுங்கள்

நம் கடவுள் துதிகள் மத்தியில் வாசம் செய்கிறார்

கடவுளைத் துதியுங்கள்

உங்களைக் கட்டிவைத்திருப்பது போன்ற சங்கலிகள் கூட

அந்தச் சங்கலிகளுக்கு ஒரு சக்தியும் இல்லை என்பதை நினைப்பூட்டும்

நீங்கள் அவரைத் துதிக்கும்பொழுது

சாத்தான் ஒரு பொய்யன்

நாம் ஒரு கோமாளிகள் என்று அவன் நம்மை

நினைக்க வைக்க விரும்புகிறான்

ஆனால், அவனுக்கே தெரியும்

நாம் இராஜாவின் பிள்ளைகள் என்பது

ஆகவே, நம்பிக்கை என்ற கேடகத்தை கையில் பிடியுங்கள்

ஏனெனில், நாம் வெற்றிபெற்ற யுத்த வீரர்கள்

இயேசு கிறிஸ்து ஏற்கனவே மரணத்திலிருந்து உயிரோடு எழுந்துவிட்டார்

ஆகவே, அவர் யுத்ததில் ஜெயித்த இராஜாவாகும்

டே ஸ்பிரிங் (வோர்ட்) 1979 மூலம் ஹீட் த கால் என்ற இம்பிரியல் பாடல் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது.

ப்ரொவெளன் பென்னிஸ்டர் மற்றும் மைக் ஹட்சன் எழுதி இசையமைத்த பாடல்.

இந்த புத்தகத்தை வாசிக்கிற நீங்கள், “நான் வாழும் சூழ்நிலை முற்றிலும் நம்பிக்கையற்ற ஒரு சூழ்நிலை” என்று சொல்லலாம். அது உங்கள் திருமண வாழ்வு சம்பந்தமாக இருக்கலாம், உங்கள் குடும்ப வாழ்வு சம்பந்தமாக இருக்கலாம், உங்கள் பிள்ளைகளுடைய வாழ்வு சம்பந்தமாக இருக்கலாம், உங்கள் பொருளாதாரம் சம்பந்தமாக இருக்கலாம், உங்கள் தொழில், வேலை, வியாபாரம் சம்பந்தமாக இருக்கலாம். நாம் அனைவருமே அதுபோன்ற சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடுகிறது. ஆகவே, “உங்கள் நம்பிக்கையை ஒருபோதும் இழந்துபோகாதிருங்கள்” என்று நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நம்பிக்கையை இழந்துபோகாதிருப்பது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில், நீங்கள் நம்பிக்கையை இழக்கும்பொழுது, உங்கள் உள்ளான மனிதனில் பெலனை இழந்து போகிறீர்கள். நீங்கள் நம்பிக்கையை இழக்கும்பொழுது, புயல் வீசும்பொழுது நங்கூரம் இடாத கப்பல்போல இருக்கிறீர்கள். கடலில் மூழ்கும் கப்பல் போல உங்கள் வாழ்வு மாறுகிறது. நம்பிக்கையை இழக்கும்பொழுது, கடவுள் கொடுத்த வாக்கின்மீது உங்களுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் போகிறது.

கடவுள் மீதும், அவர் கொடுத்த வாக்கின்மீதும் நம்பிக்கையோடு இருங்கள். உங்கள் வாழ்க்கையைப் பற்றி கடவுள் சொன்ன வார்த்தைகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பாருங்கள். உங்கள் திருமண வாழ்வு பற்றி, உங்கள் குடும்பம் பற்றி அவர் என்னென்ன வாக்குகள் கொடுத்திருக்கிறார்? அந்த வாக்குகளை உறுதியாக பிடித்துக்கொள்ளுங்கள். உங்கள் நம்பிக்கைக்கு ஆதாரமாக அவருடைய வாக்குகளை வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் கடவுள் வாக்குக்கொடுத்தால், உங்கள் தற்போதைய சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவர் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவார்.

கடவுள் கொடுத்த வாக்கை நிறைவேற்றும்பொழுது நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்பதை உங்கள் மனக்கண்களில் கொண்டுவந்து பாருங்கள். உங்கள் நம்பிக்கை உயிரோடு இருக்க அது பேருதவியாக இருக்கும்.

**எபேசியர் 3:20**
**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு**

- கடவுள் சொன்னபடியே நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு நம்புங்கள்.
- நம்பிக்கை அற்ற உங்கள் சூழ்நிலையால், கடவுள் சொன்ன வாக்கின்மீதான நம்பிக்கையை அழிக்க விடாதீர்கள்
- கடவுள் கொடுத்த வாக்கை அடைந்தே தீருவேன் என்ற தீர்மானத்தோடு அதற்கு எதிரிடையான எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளுங்கள்
- கடவுள் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையினால் கிடைக்கும் சந்தோசத்தை அனுபவித்து, கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival*
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks*
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change*
Code of Honor
Divine Favor*
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling*
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Giving Birth to the Purposes of God*
God Is a Good God
God's Word
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife*
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses-Don't Take Them
Open Heavens*
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith *
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus *
The Night Seasons of Life
The Power of Commitment*
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power*
The Wonderful Benefits of speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different*
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

எமது திருச்சபை வலைத்தளம் **apcwo.org/books**-ல், மேலே குறிப்பிடப்பட்ட எல்லா பதிப்புகளையும், PDF வடிவில் இலவசமாகத் தரவிறக்கம் செய்துகொள்ளலாம். இவைகளில் பல புத்தகங்கள் வேறு இந்திய மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

*இக்குறியிட்ட புத்தங்கள் PDF வடிவில் மட்டுமே உள்ளது

ஆடியோ, வீடியோ செய்திகள், செய்திக் குறிப்புகள், மேலும் பல உபயோகமானவைகளை எங்களுடைய **apcwo.org/sermons** என்ற வலைத்தளத்தில் நீங்கள் பெற்றுப் பயனடையலாம்.

# வார விடுமுறை வேதாகமப் வகுப்புகளில் கலந்துகொள்ளுங்கள்

வாழ்வின் ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதியைக் குறித்தும், குறிப்பிட்ட ஊழியங்களைக் குறித்தும், விசுவாசிகளுக்குப் பயிற்சி அளித்து, அவர்கள் திறமைகளை வளர்க்க பெங்களூரில் வாரவிடுமுறை வேதாகம வகுப்புகள் நடத்தப்படுகிறது. இது அனைவரும் கலந்துகொள்ள வசதியாக, சனிக்கிழமை காலை 9 முதல் மாலை 6 மணிவரை நடத்தப்படுகிறது. விருப்பம் உள்ள எல்லாவித சபைப் பிரிவுகளைச் சேர்ந்த, அனைத்துத் திருச்சபை உருப்பினர்களும் இந்த வாரவிடுமுறை வகுப்புகளில் கலந்துகொண்டு தங்கள் திறணை வளர்த்துக்கொள்ளலாம். பின்வரும் விடுமுறை வேதாகம வகுப்புகள் தற்போது நடத்தப்படுகின்றன:

தீர்க்கதரிசன ஊழிய விடுமுறை வேதாகம வகுப்புகள் சுகமளிக்கும், விடுதலை அளிக்கும் ஊழிய விடுமுறை வேதாகம வகுப்புகள் ஆவியானவரின் வரங்கள் குறித்த விடுமுறை வேதாகம வகுப்புகள் விண்ணப்பங்களும் ஜெபங்களும் குறித்த விடுமுறை வேதாகம வகுப்புகள் உள்ளான மனிதனின் முழுமை குறித்த விடுமுறை வேதாகம வகுப்புகள் கடவுள் கிரியை செய்வது குறித்த விடுமுறை வேதாகம வகுப்புகள் நகர்புற ஊழியம், சபை ஊழியம் குறித்த விடுமுறை வேதாகம வகுப்புகள் கிறிஸ்தவ வேதாகம கருத்துகளை தற்காப்பது குறித்த விடுமுறை வேதாகம வகுப்புகள்

தற்போது நடந்துகொண்டிருக்கும் வகுப்புகள் மற்றும் அதற்கு விண்ணப்பிக்க **apcwo.org/weekendschool** என்ற வலைத்தளத்தை அனுகவும்.

# கிறிஸ்தவ தலைவர்கள் கருத்தரங்குகளை நடத்த

திருச்சபை போதகர்களுக்கும், உள்ளூர் திருச்சபைத் தலைவர்களுக்கும், கிறிஸ்தவ ஸ்தாபனத் தலைவர்களுக்கும், கிறிஸ்தவ ஊழியம் செய்கிற மற்றவர்களுக்கும் ஆவிக்குரிய அபிஷேகத்தில் வளர ஆல் பீப்புள் சர்ச் பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சியில் கலந்துகொள்ளுகிறவர்களுக்கு அபிஷேகம் குறித்த போதனைகள் தவிர, ஆவியானவரால் வழிநடத்தப்படும் ஊழியம், வரங்களைப் பகிரந்தளித்தல், போன்ற சத்தியங்களை எங்கள் குழுவினர் தனிப்பட்ட முறையில் பேசுவார்கள், விவாதிப்பார்கள். ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் இந்தப் பயிற்சி இரண்ட அல்லது மூன்று நாட்கள் நடைபெறும். இதில் கலந்துகொள்பவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் புதுப்பிக்கப்பட்டு, தங்கள் ஊழியங்களில் சிறப்பாகச் செயல்பட, தாக்கங்களை ஏற்படுத்த திறமை பெற்றுச் செல்லுவார்கள். ஒரு உள்ளூர் திருச்சபையோ, ஒரு கிறிஸ்தவ ஊழியமோ, ஸ்தாபனமோ, திருச்சபைகளுக்கான தலைமையோ இந்த கிறிஸ்தவ தலைவர்கள் கருத்தரங்குகளை நடத்தலாம். இதை நடத்த அழைப்பவர்களே இதை நடத்துவதற்கான செலவுகளையும், கலந்துகொள்ளுகிறவர்களின் செலவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆல் பீப்புள் சர்ச், இவைகளை நடத்துகிற குழுவினர்களை அனுப்பி உதவிசெய்யும்.

பின்வரும் தலைப்புகளில் இவ்வாறான கருத்தரங்குகளை நடத்த உதவிசெய்கிறோம்:

- எழுப்புதல், தேவனோடு சந்திப்பு, தேவ அசைவாடுதல்
- தேவ பிரசன்னமும் மகிமையும்
- தேவ இராஜ்ஜியம் கட்டுகிறவர்கள் (தேவ இராஜ்ஜியமும், அதைக் கட்டுதலும்)
- களம் அமைத்தல்
- தேவனுடைய வீடு
- அப்போஸ்தல மற்றும் தீர்க்கதரிசன ஊழியம்
- சுகமளிக்கும், மற்றும் விடுதலைளிக்கும் ஊழியம்
- ஆவியானவரின் வரங்கள்
- திருமணமும், குடும்பமும்
- பரிசுத்தவான்களின் திறனை வளர்த்தலும்,
- வேலை ஸ்தலங்களில் மறுரூபமாதலும்.

மேலும், தற்போதை கருத்தரங்குகளின் கருப்பொருட்களை அறியவும், மேலும் விவரங்களுக்காக **apcwo.org/CLC** ஐ தொடர்புகொள்ளவும்.

இதுபோன்ற கிறிஸ்தவ தலைவர்கள் கருத்தரங்குகளை நீங்கள் நடத்த விரும்பினால், contact@apcwo.org என்ற மின்னஞ்சல் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

# ஆல் பீப்புள் சர்ச்யைப் பற்றி…

ஆல் பீப்புள் சர்ச்சின் தரிசனம் பெங்களூர் பெருநகரத்திற்கு உப்பாக, ஒளியாக திகழவேண்டும் என்பதும், இந்திய தேசத்திற்கும், மற்ற தேசங்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றி குரல் எழுப்ப வேண்டும் என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும், வெளிப்பாடுகளோடும் கடவுளுடைய வார்த்தையில் எந்தக்கலப்படமும் இல்லாமல், முழுமையாக அதை மக்களுக்குச் சொல்லும் அர்பணிப்போடு ஆல் பீப்புள் சர்ச் செயல்பட்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள், ஆவியின் வரங்கள் மூலம் கடவுளுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிப்பதற்கு மாற்றாக, நல்ல இசையோ, புதுபுதுத் திறமைகளைக் காட்டி அறிவிப்பதோ, திறமையாகப் பேசுவதோ, நவீன கால ஊழிய உத்திகளோ மாற்றாக இருக்க முடியாது என்பது எங்கள் நம்பிக்கை (1கொரி. 2:4,5; எபிரே. 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு கிறிஸ்து. மக்களுக்கு ஊழியம் செய்வது எங்கள் தலையாய நோக்கம், கிறிஸ்துவைப் போல வளர்ச்சியடைவதே எங்கள் நோக்கம்.

பெங்களூருவை மைய்யமாகக்கொண்ட ஆல் பீப்புள் சர்ச்சிற்கு இந்தியாவின் பல இடங்களில் கிளை சபைகள் உள்ளது. தற்போது எங்கெங்கே கிளை சபைகள் உள்ளது என்பதை அறிய **www.apcwo.org/locations** என்ற வலைத்தளத்திலோ, **contact@apcwo.org** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவது மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம்.

# கடவுள் உங்களை நேசிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு, கடவுள் இவ்வுலகிற்கு ஒரு மனிதனாக வந்தார். அவர் பெயர் “இயேசு”. அவர் ஒரு பாவமும் செய்யாத ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார். இயேசு என்ற பெயரில், கடவுள் ஒரு மனித உடலில் வாழ்ந்தபடியால், அவர் சொன்னது, செய்தது அனைத்தும் கடவுள் எப்படிப்பட்டவர்? என்பதை நமக்குக் காட்டியது. அவர் பேசிய வார்த்தைகள் அனைத்தும், கடவுள் பேசிய வார்த்தைகளாகும். அவர் செய்தவைகள் அனைத்தும், கடவுள் செய்த செயல்களாகும். இந்தப்புவியிலே, இயேசு அனேக அற்புதங்களைச் செய்தார். கஷ்டகளில், வியாதிகளிலிருந்து அனேகரை அவர் குணப்படுத்தினார். குருடான கண்களைப் பார்க்கச் செய்தார்; கேட்க இயலா செவிகளைக் கேட்கச் செய்தார்; நடக்க இயலா கால்களை நடக்கச் செய்தார்; அனைத்துவித வியாதிகளையும் குணமாக்கினார். பசியோடிருந்த ஆயிரமாயிரமானவர்களுக்கு, அற்புதமாக ரொட்டியைப் பெருகச் செய்து, வயிறார சாப்பிட செய்தார்; புயலை அடக்கினார் இவ்வாறாக அனேக ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்.

அவர் செய்த அனைத்து செயல்களுமே, கடவுள் நல்ல கடவுள் என்பதை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது. மக்கள் நன்றாக, சுகமாக, சந்தோசமாக வாழவேண்டும் என்பதே கடவுளுடைய விரும்பம் என்பதையும் புரிந்துகொள்ளச் செய்தார். மனிதர்களுடைய தேவைகளை நிவிர்த்திசெய்வதே அவருடைய விருப்பமாகும்.

அப்படியென்றால், கடவுள் ஏன் மனிதனாக மாறி இவ்வுலகிற்கு வரவேண்டும்? இயேசு ஏன் இவ்வுலகில் வாழ வேண்டும்?

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்மைப் படைத்த கடவுளுக்குப் பிடிக்காதவைகளைச் செய்து பாவிகளாகிப்போனோம். பாவத்திற்கான எதிர் விளைவுகளும் உள்ளது. கடவுளுக்கும், நமக்கும் இடையில் பாவமானது தொடர்புகொள்ள இயலாத் தடையாக இருக்கிறது. இவ்வாறாக, பாவம் நம்மையும், கடவுளையும் பிரிக்கிறது. பாவம், நம்மைப் படைத்த கடவுளோடு நாம் தொடர்புகொள்ள இயலாது, நாம்மால் அவரைப் புரிந்துகொள்ள இயலாது தடுக்கிறது. ஆகவே, அனேகர்கள் இந்தக் குறையைத் தீர்க்க வேறுபல வழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

பாவத்தினுடைய மற்றொரு விளைவு, நித்தியமாக கடவுளைவிட்டுப் பிரிந்து வாழ்வதாகும். கடவுளுடைய நீதிமன்றத்திலே, பாவத்திற்கான தண்டனை, மரணமாகும். மரணம் என்றால் நித்தியமாக அவரைப் பிரிந்து நரகத்தில் வாழ்வதாகும்.

ஆனால், நல்ல செய்தி என்பது, நாம் அந்த பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளோடு தொடர்புகொண்டு அவரோடு சேர்ந்து வாழ இயலும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்” (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது, இவ்வுலகின் பாவங்கள் அனைத்திற்குமான விலைக்கிரயத்தை செலுத்திவிட்டார். பின்பு, அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கும்பொழுது, அவர் உயிரோடு இருக்கிறதை அனேகருக்கு காண்பித்து, பின்பு மீண்டும் பரலோகம் செல்கிறார்.

கடவுள் அன்பாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். எந்த மனிதனும் நரகத்திற்குச் செல்லவேண்டும் என அவர் விரும்புவதில்லை. ஆகவே, மனிதர்கள் அனைவரும் பாவத்திலிருந்து விடுபட்டு, பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்ற வழி ஏற்படுத்தவே, அவர் இந்த பூமிக்கு வந்தார். உங்களையும், என்னையும் போன்ற பாவ மனிதர்களை பாவத்திலிருந்தும், நித்திய அழிவிலிருந்தும் காப்பாற்றவே அவர் இப்புவிக்கு வந்தார்.

உங்கள் பாவத்திற்குரிய மன்னிப்பை இலவசமாக நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என வேதாகமம் கூறுகிறது. அது என்னவென்றால், நமக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்ததை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான். (அப்போஸ்தலர் 10:43)

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காகச் செய்ததை நம்பி, அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நீங்கள் உங்கள் பாவத்திற்கு கடவுளிடம் மன்னிப்புப் பெற்று, உங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்படுகிறீர்கள்.

இயேசு கிறிஸ்து, சிலுவையில் உங்களுக்காக என்ன செய்தார் என்று அவர் மீது உங்களுக்கு நம்பிக்கைவரும் தீர்மானத்தை எடுக்க பின்வரும் மாதிரி ஜெபத்தை நீங்கள் செய்யலாம். இயேசு கிறிஸ்து உங்களுக்காகச் செய்தவைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அவருடைய மன்னிப்பையும், பாவக்கறைகளிலிருந்து சுத்திகரிப்பையும் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவலாம். இந்த ஜெபம் நீங்கள் எப்படிச் ஜெபிக்கலாம் என்று உதவுவதற்கேயாகும். அதன்பின்பு, நீங்களே சொந்தமாக ஜெபிக்கலாம்.

என் வாழ்வை ஆளும் இயேசுவே! நீங்கள் சிலுவையில் எனக்காக என்ன செய்தீர்கள் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீங்கள் எனக்காக மரித்தீர்கள். நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற, உங்களுடைய விலைமதிக்க இயலா இரத்தத்தைச் என் பாவங்களுக்கு விலைக்கிரயமாகச் செலுத்தினீர்கள். உங்களை நம்புகிறவர்களுக்கு, பாவங்களுக்கான மன்னிப்பு கிடைக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது.

ஆகவே, நீங்கள் எனக்காக சிலுவை மரணத்தின் மூலம் செய்தவைகளையும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் செய்தவைகளையும் இன்று நான் நம்புகிறேன். நான் என்னதான் நல்ல செயல்களைச் செய்தாலும், என் வாழ்வை என்னால் காப்பாற்ற இயலாது என்பது எனக்குத் தெரியும். உங்களிடம் என் பாவத்திற்கான மன்னிப்பை பெற, என்னால் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

நீங்கள் எனக்காக மரித்தீர்கள், என் பாவத்திற்கான விலையைச் செலுத்தினீர்கள்; மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தீர்கள் என்று இன்று நான் மனதார நம்புகிறேன்; இந்த நம்பிக்கையின் மூலம், நீங்கள் என்னை மன்னிக்கிறீர்கள், என் வாழ்வைச் சுத்தமாக்குகிறீர்கள் என்று வாயாற அறிக்கையிடுகிறேன்.

நன்றி இயேசுவே! உங்களைத்த தொடர்ந்து நேசிக்க உதவுங்கள். உங்களை மேலும் அறிந்து, உங்களுக்கு உண்மையாய் வாழ உதவுங்கள். ஆமென்.

# மற்றவர்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் எங்கள் தரிசனத்தோடு பங்காளிகளாகுங்கள்

திறனை வளர்க்க

பெங்களூருவில் உள்ள, உலகை நற்செய்தியால் சந்திக்கும் ஆல் பீப்புள் சர்ச் மற்றும் திறன் மேம்பாட்டு நிலையம் உலக தரத்தில் கலைகளை மேம்படுத்தும் நிலையமாகவும், உலகெமெங்கும் பரவியுள்ள கிறிஸ்துவின் உடலாகிய சபைக்குச் சேவை செய்யும் இயக்கமாகச் செயல்படுகிறது.

ஆவியானவரின் அபிஷேகத்தோடு, வேதாகம அடிப்படையில் நவீன உத்திகள், கருவிகள் மூலம் திறனை வளர்க்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உள்ளூரிலும், உலகமெங்கிலும், புதிய தலைமுறை கிறிஸ்தவ ஊழியர்களை அனுப்பி, அவர்களைத் தாங்கி வருகிறது. உலகமெங்கும் உள்ள மக்களோடு தொடர்புகொண்டு, தங்கிப்படிக்கும் வேதாகம வகுப்புகளும், இணையதளம் மூலம் தொலைதூர நேரடி வகுப்புகளும், இணையத்தில் பதிவு செய்யப்பட்ட வகுப்புகள் மூலமாகவும் வேதாகம கல்வி வசதிகளும் அளிக்கப்படுகிறது. ஆராதனை ஸ்தலமும், சிறுவர், வாலிபர்களுக்கான நிலையும் 24&7 நேரங்களிலும் செயல்படுகிறது.

கடவுள் உங்களை ஏவுகிற பிரகாரமாக, சமுதாயத்தை நற்செய்தியால் சந்தித்து தாக்கத்தை ஏற்படுத்த எங்களோடு இணைந்து, நீங்கள் எங்களுக்கு உதவுகிற எந்த அளவிலான பண உதவிகளையும் நாங்கள் வரவேற்கிறோம். பின்வரும் வங்கி கணக்கு, விலாசத்தைப் பயன்படுத்தி நீங்கள் உலகை நற்செய்தியால் சந்திக்கும் ஆல் பீப்புள் சர்ச் மற்றும் திறண் மேம்பாட்டு நிலையத்திற்கு உதவி செய்யலாம்.

| இணையதளம் மூலம் பணம் அனுப்ப | காசோலை மூலம் பணம் அனுப்ப |
|---|---|
| Account: **All Peoples Church Building Fund AC**<br>Account No: 520101021447450<br>IFSC Code: CORP0000656<br>Bank Name: Corporation Bank<br>Branch Name: R.T Nagar Branch, Bangalore | **All Peoples Church Building Fund AC** என்ற பெயரில் காசோலை எழுதப்பட்டு பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பவும்:<br>All Peoples Church,<br>#319, 2nd Floor, 7th Main, 2nd Block HRBR Layout, Kalyan Nagar, Bangalore 560043, Karnataka, India |

இந்தியாவிற்குள் இருந்து எந்த வங்கிக் கணக்குமூலமாகவும் நீங்கள் பணத்தை அனுப்பலாம். வெளிநாடுகளிலிருந்து பணம் பெறும் வசதி எங்களுக்கு இல்லை. வேறு ஏதாவது விபரங்களுக்காக buildtoimpact@apcwo.org என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.

எங்களது ஊழிய வளர்ச்சி, மற்ற செய்திகளை அறிய **apcwo.org/buildtoimpact** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

## All Peoples Church
## Bible College & Ministry Training Center

பெங்களூரு, இந்தியாவில் உள்ள ஆல் பீப்புள் சர்ச் வேதாகம கல்லூரி மற்றும் ஊழிய பயிற்சி மையம், ஆவியில் நிறைந்த, அபிஷேகத்தோடான நேரடி பயிற்சியளிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊழியங்களைச் செய்யும் திறனை வளர்க்கிறது. அதோடுகூட சத்தியம் நிறைந்த, சிந்தைகளைத் தூண்டக்கூடிய வேதபாட வகுப்புகள் நடத்தப்படுகிறது. கடவுளுடைய குணாதிசயங்களை மையப்படுத்தி, ஒருவர் முழுமையாக வளர்ச்சியடைவதே எங்கள் நம்பிக்கை. மேலும், வேத வசனங்களில் வேர்ஊன்றி, கடவுளோடு உள்ள உறவில் வளர்ந்து, அடையாளங்கள், அற்புதங்கள், அதிசயங்கள் முலம் கடவுளுடைய வல்லமை வெளிப்பட வேண்டும் எங்கள் நம்பிக்கை.

மேலும், APC-BC நல்ல வேதபோதனைகளை முக்கியப்படுத்துவதுடன், கடவுளுடைய அன்பையும், பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும், அபிஷேகத்தையும் வெளிப்படுத்துவதையும் முக்கியப்படுத்துகிறோம். அனேக வாலிப ஆண்களுக்கும் பெண்களுக்கம் பயிற்சி கொடுத்து, அவர்களை கடவுள் எதற்காக அழைத்தாரோ அவைகளை நிறைவேற்ற அனுப்பி வைத்துள்ளோம்.

நாங்கள் மூன்றுவித வேதாகம கல்வியைத் தருகிறோம்:

- தியாலஜி மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒருவருட சான்றிதல் படிப்பு (C.Th.)
- தியாலஜி மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- தியாலஜி மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்றுவருட இளங்கலை படிப்பு (B.Th.)

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 முதல் மதியம் 1 வரை வகுப்புகள் நடத்தப்படுகிறது. தினசரி வந்து கற்பவர்கள், வேலை செய்பவர்கள், வீட்டுப் பொறுப்புக்களை கவனிப்பவர்கள் போன்ற அனைவரும் இதில் மதியம் 1 மணிவரை படிக்கலாம். இங்கேயே தங்கி படிப்பவர்களுக்கு ஆண்கள், பெண்களுக்கு எனத் தனித்தனி தங்கும் வசதிகளும் உள்ளது. இங்கு தங்கிப் படிப்பவர்களுக்கு மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை ஊழிய ஸ்தலங்களுக்குச் செல்லுதல், சிறப்பு கருத்தரங்குகள், ஜெபம், ஆராதனை போன்றவைகள் இருக்கும். தினசரி வகுப்புகளுக்கு வந்து செல்பவர்கள் விரும்பினால் இவைகளில் பங்கெடுக்கெலாம், ஆனால், கட்டாயமில்லை. அனைத்து மாணவர்களும், ஞாயிறுகளில் ஒவ்வொரு திருச்சபைகளில் ஊழியம் செய்ய உற்சாகப்படுத்தப்படுவார்கள்.

இணையத்தளம் மூலம் விண்ணப்பிக்க, கல்லூரி பற்றிய விபரங்கள், பாடத்திட்டங்கள், தகுதிகள், கல்விக்கட்டண° குறித்த விபரங்களைப் பெறவும், விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்யவும் **apcbiblecollege.org** என்ற இணைய விலாசத்தைப் பயன்படுத்தவும்.

Nations Association for Theological Accreditation (NATA) வோடு APC-BC இணைந்து செயல்படுகிறது.

நம்முடைய வாழ்க்கை சில வேளைகளில் எதிர்பாராத திருப்பங்களைச் சந்திக்கிறது. சிலவேளைகளில் நாம் புயலின் நடுவில் சிக்கிக்கொண்டது உணர்கிறோம். நம் வாழ்வில் அனைவரும் பல சவால்களையும், சங்கடங்களையும் சந்திக்க வேண்டி வருகிறது. சிலவேளைகளில், இதற்கு மேல் நம்மால் நகர முடியாது, எங்கும் திரும்ப முடியாது என்ற சூழ்நிலைக்கு நாம் வந்து சேர்கிறோம்.

உங்கள் வேலை காரியங்கள், தொழில் சூழ்நிலைகள், கல்வி, குடும்ப சூழல், திருமணம், போன்றவைகளில் நம்பிக்கையே இல்லாத சூழ்நிலையின் நடுவில் நீங்கள் சிக்கித் தவிக்கலாம். ஆனால், வேதாகமத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள கடவுளால் நம்பிக்கையற்ற, செத்த சூழ்நிலைக்கு உயிர் கொடுக்கும் சிறப்பு வாய்ந்தவர். நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை தலைகீழாக மாற்றுவதில் அவர் திறண் வாய்ந்தவர். உங்களுடைய நம்பிக்கையற்ற சூழ்நிலையில், அவர் உங்களோடு இருந்தால் போதும், உங்கள் மனதில் நம்பிக்கை துளிர்க்கும்.

எந்தவொரு நம்பிக்கைக்கும் இடமில்லை என்ற சூழ்நிலையில் இருக்கிற நீங்கள் வெற்றியோடு வெளிவரலாம். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நம்பிக்கையை இழந்துபோகவேண்டாம் என்று இந்தப் புத்தகம் மிக எளிய முறையில் உற்சாகப்படுத்துகிறது. கடவுள் மீதும், அவர் வார்த்தைகளின் மீதும் நம்பிக்கையோடு இருங்கள். உங்கள் வாழ்க்கை குறித்து கடவுள் உங்களோடு பேசிய வார்த்தைகளை நினைத்துப் பாருங்கள்! நம்பிக்கை இழக்காதீர்கள்!

ஆசீஸ் ராய்ச்சூர்

எங்களைத் தொடர்புகொள்ள:
All Peoples Church & World Outreach
#370, 2nd floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar,
Bangalore - 560 043, Karnataka, INDIA
Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org